விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 016 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 19 வியாழக்கிழமை (04.01.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## அரசியல் தீர்வை வென்றெடுக்க அரசுடன் இணைந்து பணியாற்றுங்கள்

### ஜனாதிபதி இன்று யாழுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள நிலையில் தமிழ் எம்.பிக்களுக்கு அழைப்பு

(கொழும்பு)

அரசுடன் சேர்ந்து பணியாற்ற வடக்கு கிழக்கு தமிழ்ப் பாராளு மன்ற உறுப்பினர்கள் முன்வர வேண்டும். அப்போதுதான் பொரு ளாதாரத் தீர்வையும், அரசியல் தீர்வையும் நாம் விரைவில் வென் றெடுக்க முடியும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித் தார்.

ஜனாதிபதி நான்கு நாள் பய ணம் மேற்கொண்டு இன்று வடக் குக்கு விஜயம் மேற்கொள்கின் றார்.

இந் நிலையில், 15

## யாழில் போதையை கட்டுப்படுத்துவதில் பொலிஸார் அசமந்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் போதைப்பொருள் வியா பாரம் மற்றும் பாவனையை கட்டுப்படுத்துவதற் கான பொலிஸாரின் நடவடிக்கைகள் தொடர்பில் அதிருப்தி வெளியிட்டுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்தியக் கடற்றொழிலாளர் விவ காரத்திற்குத் திடமான தீர்மானத்தினை மேற்கொள்ள வேண்டிய அவசியத் 15

வாழ்த்துகின்றோம்

இன்று ஆரம்பமாகவுள்ள க.பொ.த உயர்தர பர்ட்சைக்குத் தோற்றவுள்ள அனைத்து மாணவர்களும் சிறந்த பெறுபேறுகளை பெற வாழ்த்துகின்றோம்.
வலம்புரி கல்விப் பிரிவு


# யாழ்.மாவட்டத்துக்கு ஜனாதிபதி இன்று விஜயம்

## பல்வேறு நிகழ்வுகளுக்கும் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று விஜயம் செய்யவுள் ளார்.

யாழ்.வருகை தரும் ரணில் மாவட்ட அபி விருத்திக் குழுக்கூட்டத்தில் பங்குபற்றுவதோடு பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்ள வுள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)




உங்கள் வலம்புரியில் இன்று முதல்
புத்தாண்டு பலன்கள்
வாசிக்கத் தவறாதீர்கள்

## ரணிலின் யாழ் வருகையை எதிர்த்து பாரிய போராட்டத்துக்கு ஏற்பாடு

### பொது அமைப்புகளுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க இன்று யாழ்.மாவட்டத் துக்கு விஜயம் செய்யவுள்ளது டன், தொடர்ந்து 7ஆம் திகதி வரை வடக்கில் பல்வேறு நிகழ் வுகளில் கலந்து கொள்ளவுள் ளார்.

குறித்த ஜனாதிபதியின் வருகைக்கு எதிர்ப்புத் தெரி வித்து, பொது அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் இணைந்து போராட்டம் ஒன்றை யாழில் முன்னெடுக்கவுள்ளதாக தக வல்கள் வெளியாகியுள்ளன.

தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப் படவில்லை என்றும், மக்களின் அபிலாசைகள், அடிப்படைப் பிரச்சினைகளை தீர்ப் பதற்கான முயற்சி 15

## ரணிலின் யாழ்.விஜயத்தின்போது எதிர்ப்பு நடவடிக்கை

### பொலிஸாரின் மனு நீதிமன்றால் நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்கவின் யாழ்ப்பாண விஜயத்தின் போது எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக் கப்படுவதை தடுக்கக் கோரி யாழ்ப்பாண பொலிஸார் விடுத் திருந்த கோரிக்கையை யாழ்ப்பாண நீதவான் நீதிமன் றம் நிராகரித்துள்ளது.

சட்டத்தை மீறாத வகை யில், ஜனநாயக ரீதியில் எதிர்ப் பில் ஈடுபடுவதற்கான உரிமை உள்ளதாகவும் நீதிமன்றம் இதன் போது அறி வித்துள்ளது. 16

### ரணிலின் வடக்கு விஜயம்

## தமிழர்களின் நம்பிக்கையை வெற்றி கொள்ள வேண்டும்

### விக்னேஸ்வரன் வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

அரசியல் தீர்வு, நல்லிணக்கம் உள்ளிட்ட விடயங்களில் அர்த்த பூர்வமான நகர்வுகளை முன்னெ டுத்து இலங்கை வாழ் தமி ழர்களின் நம்பிக்கையை 15

## வவுனியாவில் பெண் மரணம்

### கொரோனா என சந்தேகம்

(வவுனியா)

வவுனியா வைத்தியசாலை யில் சிகிச்சை பெற்று வந்த பெண்ணொருவர் மரணமடை ந்த நிலையில் அவருக்கு கோவிட் தொற்று ஏற் பட்டுள்ளதா? என்ற 15

## வருமானத்தை அதிகரிக்க வரியே மாற்றுவழி

(கொழும்பு)

பெறுமதி சேர் வரியை (VAT) அதிகரிப்பதே அரச வருமானத்தை அதிகரிப்பதற் கான மாற்று வழி என ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

தவறான பொருளாதார தீர் மானங்களை எடுப்பதன் மூலம் ரூபாயின் பெறுமதி மீண்டும் வீழ்ச்சியடையும் என சுட்டிக் காட்டிய ஜனாதிபதி, சிலர் கூறு வது போன்று பிரபலமான தீர் மானங்களை மேற்கொண்டு நாட்டின் எதிர்கால த்தை இருளடையச் 15

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு 06.12.2023 புதன்கிழமை அன்று
இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தாயார்

அமரர்

## திருமதி. சறோஜா சற்குணசிங்கம்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (05.01.2024) வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனை நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு
தங்களை அன்பாக கேட்டுக்கொள்கின்றோம்.


(18491)

இல. 46, சம்பியன் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

077 715 0356
077 990 0041

இங்ஙனம்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## இராமலிங்கம் அமிர்தசிங்கம்

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி, கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் அமிர்தசிங்கம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - மங்களம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சந்திரமதியின் அன்புக் கணவரும் மனோராஜ் (வைத்தியர்) அவர்களின் அன்புத் தந்தையும் கார்த்திகாவின் அன்பு மாமனும் காலஞ்சென்ற நேசமணியின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சிவஞானசுந்தரத்தின் அன்பு மைத்துனனும் விவேகானந்தன் (கனடா), காலஞ்சென்ற சிவானந்தன் மற்றும் சரோஜினிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனனும் சிவசேகரம், ஞானசேகரம், சிவராகினி, சாமினி ஸ்ரீகுமரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் ஆலடிச் சந்தி, கோம்பயன்மணல், மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள எஸ்.இன்பம் மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இன்று (04.01.2024) வியாழக்கிழமை பி.ப 12.30 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று அதன்பின்னர் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
இ.மனோராஜ் (மகன்)

தொ.பே: 077 766 8486 (18493)

# தமிழக மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

பருத்தித்துறை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான 12 தமிழக மீனவர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றச்சாட்டில் பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து கடந்த டிசம்பர் மாதம் 10ஆம் திகதி 25 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டதுடன், இரு படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் ஒரு படகில் பயணித்த, படகின் உரிமையாளர் உள்ளிட்ட 13 மீனவர்கள், 10 ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட 18 மாத சாதாரண சிறைத்தண்டனை எனும் நிபந்தனையுடன் கடந்த 22 ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டனர்.

ஏனைய 12 மீனவர்களுக்கெதிரான வழக்கில், படகின் உரிமையாளரையும் குறித்த வழக்கின் முதலாவது சந்தேகநபராக இணைத்து, சந்தேகநபருக்கு அழைப்பாணை அனுப்புமாறு நீதிமன்றில் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய, குறித்த 12 இந்திய மீனவர்களும் நேற்று பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதன்போது முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த நீதவான், சந்தேகநபர்களை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ம-7,33)

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
05 . 08 . 1947

மறைவு
15 . 01 . 2023

## அமரர் திலகவதி கணபதிப்பிள்ளை

உள்ளத்தில் உறைந்திருக்கும் உங்கள்
தெய்வீக குரல் ஓசை
இல்லத்தில் குலதெய்வமாய் குடியிருக்கும் அம்மா...
வழிகாட்டி நின்ற தெய்வம்
வானுயர்ந்த தெய்வமாகி வருடம் ஒன்று அம்மா...
உங்கள் வழித்தடத்தில் வாழ்ந்திடுவோம்
சாந்தியாய் உறங்கிடம்மா.....

சப்பச்சிமாவடி,
சாவகச்சேரி

(C-8076)

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



பிறப்பு
03 - 02 - 1940

இறப்பு
03 - 01 - 2024

## குமாரகுலசிங்கம் செல்லம்மா

கோண்டாவிலை பிறப்பிடமாகவும் கல்லுவம் கரணவாய் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட குமாரகுலசிங்கம் செல்லம்மா அவர்கள் நேற்று 03.01.2024 புதன்கிழமை காலமானார்.

அன்னார் குமாரகுலசிங்கத்தின் அன்பு மனைவியும் செல்வகுமாரி, விஜயகுமாரி, ஜெயக்குமார், ஞானகுமாரி காலஞ்சென்ற சிவகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று 04.01.2024 வியாழக்கிழமை பகல் 12.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(C-8075)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி ஏற்ற பின்னர் பழைய பல்லக்கில் சவாரி

## ஜனாதிபதிகளை பகிரங்கமாக சாடும் தேரர்

(கொழும்பு)

**நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதாக வாக்குறுதி அளிக்கும் ஜனாதிபதிகள் பதவி ஏற்றுக் கொண்டதன் பின்னர் அதனை மறந்துவிடுவதாக மல்வத்து பீடாதிபதி திப்பட்டுவாவே ஸ்ரீசித்தார்த்த தேரர் தெரிவித்துள்ளார்.**



முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய நேற்றுமுன்தினம் மல்வத்து பீடாதிபதியை சந்தித்த போது அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

தான் மாநாயக்க தேரராக பதவி ஏற்றுக்கொண்ட கடந்த இருபது ஆண்டுகளாகவே இந்த நிலைமை நீடிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிறைவேற்று அதிகாரத்தை ரத்து செய்வதாக தம்மிடம் வாக்குறுதி அளித்த ஜனாதிபதிகள் எவரும் பதவி ஏற்றதன் பின்னர் அந்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் காலத்திலும் இந்த விடயம் பற்றி பேசப்பட்டு தேர்தலின் பின்னர் வழமை போன்று அந்த விடயம் இருட்டடிப்புச் செய்யப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

# மின்சார சபை ஊழியர்களின் விடுமுறைகள் இரத்து

(கொழும்பு)

இலங்கை மின்சார சபையில் பணியாற்றும் அனைத்து ஊழியர்களின் விடுமுறைகளும் நேற்று முன்தினம் முதல் மறு அறிவித்தல் வரும் வரை இரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையின் பதில் பொது முகாமையாளர் பொறியியலாளர் நரேந்திர டி சில்வா வெளியிட்டுள்ள சுற்றறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், அவசர தேவைகளுக்காக சம்பந்தப்பட்ட கிளை / பிரிவின் ஊடாக நிர்வாக அதிகாரியின் ஒப்புதலுடன் ஊழியர்கள் விடுமுறையை எடுக்க முடியும் என்றும் குறித்த சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# தமிழ் பொது வேட்பாளர் என்பது அரசியலில் பேசுபொருள் மட்டுமே

## ஐக்கிய சோஷலிசக் கட்சி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தமிழ் பொது வேட்பாளர் என்ற விடயம் அரசியல் களத்தில் பேசுபொருள் மாத்திரமே. அது நடைமுறைக்குச் சாத்தியமற்ற விடயமாகும் என ஐக்கிய சோஷலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

மேலும், அவ்வாறான முயற்சி இடம்பெற்றாலும் இந்தியாவின் கோரிக்கையின் பிரகாரம் அதனைக் கடைசியில் கைவிட்டுவிடுவார்கள் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் விவகாரம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் "இந்தியா விரும்பும் தெற்கு வேட்பாளரையே வடக்கு - கிழக்குத் தமிழர்கள் ஆதரிப்பார்கள். அரசியல் களத்தில் நாடிபிடித்துப் பார்ப்பதற்காக அவ்வப்போது ஏதேனும் ஏற்பாடுகள் இடம்பெறும். அந்த வகையிலேயே தமிழ் பொது வேட்பாளர் விடயமும் தற்போது முன்வைக்கப்பட்டுள்ளது.

ஆனாலும், இது நடைமுறைச் சாத்தியமற்ற விடயம். அதைப் பற்றிப் பேசிப் பயன் இல்லை. ஏனெனில் இலங்கையில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலானது இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான போட்டியாகவே அமையவுள்ளது.

கடைசியாக மாலைதீவில் நடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் இந்த நிலைமையே காணப்பட்டது. அந்தவகையில் மொட்டுக் கட்சி தரப்புக்குச் சீனாவும் சஜித் தரப்புக்கு இந்தியாவும் பின்புலமாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-5-6)

# உயிர்காப்பு மருந்துகளுக்கு தட்டுப்பாடில்லை- சுகாதார அமைச்சர்

(கொழும்பு)



இலங்கையில் தற்போது, பதிவு செய்யப்பட்ட 850 அத்தியாவசிய மருந்துகளில், உயிர் காப்பு மருந்துகளுக்கு எவ்வித தட்டுப்பாடும் இல்லை என சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர், "தற்போது நாட்டில் பதிவு செய்யப்பட்ட 850 அத்தியாவசிய மருந்துகள் காணப்படுகின்றன. அவற்றில் உயிர் பாதுகாப்பு மருந்துகளுக்கு எவ்வித தட்டுப்பாடும் இல்லை.

தட்டுப்பாடுகள் காணப்படும் மருந்து பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று அத்தியாவசிய மருத்துவ உபகரணங்கள் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

5 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் மத்தியில் தீவிரமடைந்திருந்த மந்த போசனையைக் கட்டுப்படுத்துவதற்கு யுனிசெப், உலக சுகாதார ஸ்தாபனம் உள்ளிட்ட நிறுவனங்களுடன் இணைந்து பல வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. (நி-5-6)

# ஐ.எம்.எப் ஐ மீறி செயற்பட முடியாது

## பந்துல திட்டவட்டம்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகிய கடன் வழங்குநர்களுடன் மேற்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டைத் தவிர்த்து, நாட்டின் பொருளாதாரத்தை ஒரு தினத்தில் முன்னெடுத்துச் செல்ல முடியாது என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நடைமுறைப்படுத்தாவிட்டால், யார் அரசாங்கத்தை நிர்வகித்தாலும் எந்த ஜனாதிபதி நாட்டை ஆண்டாலும் அரசாங்கத்தின் ஆயுட்காலம் இரண்டு வாரங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டு விடும்.

தற்போது நிலவும் பொருளாதார சவால் 2027 ஆம் ஆண்டு வரை தொடரும். சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத் திட்டம் 2027 ஆம் ஆண்டு நிறைவு பெறும் வரை சட்டப்படி செயற்பட்டாலே நெருக்கடியை நிவர்த்தி செய்ய முடியும் என அவர் தெரிவித்தார். (நி-5-6)

# செய்தித்துளிகள்

## விசேட சுற்றிவளைப்பில் மேலும் 1,182 பேர் கைது

(கொழும்பு)

போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் பாதாளக் குழுக்களை ஒடுக்கும் யுக்திய விசேட பொலிஸ் சுற்றிவளைப்புகளில் மேலும், 1,182 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்ட 44 பேர் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் மேலதிக விசாரணைகளுக்காக தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும் போதைப் பொருளுக்கு அடிமையான 47 சந்தேக நபர்கள் புனர்வாழ்வு மத்திய நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது. பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு ஏற்கனவே சந்தேக நபர்களாக பட்டியலிடப்பட்டு தேடப்பட்டு வந்த 138 பேரும் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளனர். (நி-5-6)

## சீரற்ற காலநிலையால் 20 ஆயிரம் பேர் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 20 ஆயிரத்தை நெருங்கியுள்ளது என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, 5 ஆயிரத்து 682 குடும்பங்களைச் சேர்ந்த 19 ஆயிரத்து 202 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அதில், கிழக்கு மாகாணத்தில் மாத்திரம், 4 ஆயிரத்து 804 குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆயிரத்து 206 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். (நி-5-6)

## புதிய உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் நியமனம்

(கொழும்பு)

புதிய உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகமாக டபிள்யூ.ஏ சேபாலிகா சந்திரசேகர நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் 1993 ஆம் ஆண்டில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் மதிப்பீட்டாளராக இணைந்து 30 வருடங்களுக்கும் மேலாக அந் நிறுவனத்தில் பல்வேறு பதவிகளை வகித்துள்ளார். (நி-5-6)

## தொலைத்தொடர்பு சேவை கட்டணங்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

வற் வரி அதிகரிப்புடன், தொலைபேசி, இணையம் மற்றும் தொலைக்காட்சி சேவைக் கட்டணங்கள் 3% அதிகரித்துள்ளது.

அதன்படி, 38.4% ஆக இருந்த தொலைபேசி சேவைகளின் மொத்த வரி சதவீதம் 42% ஆக இருக்கும் என்று தொலைத் தொடர்பு சேவை வழங்குநர்கள் தெரிவிக்கின்றனர்.

இணைய சேவைக் கட்டணங்களுக்கான புதிய வற் திருத்தத்திற்குப் பிறகு 20.3 முதல் 23.5 வரை இருக்கும் என்றும் இந்த வரிகளில் ஒய்வு வரி மற்றும் சமூகப் பாதுகாப்பு வரி ஆகியவை அடங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

# தொடரை கைப்பற்றியது அவுஸ்திரேலியா மகளிர் அணி



இந்தியாவை வீழ்த்தி தொடரை கைப்பற்றியது அவுஸ்திரேலியா மகளிர் அணி. இரு அணிகளுக்கிடையிலான 3 போட்டிகள் ஒருநாள் போட்டியில் முதல் இரு ஆட்டங்களிலும் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றுள்ளது.

இந்த நிலையில் இந்த இரு அணிகள் இடையேயான 3ஆவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி மும்பை வான்கடே ஸ்டேடியத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் டாஸ் வென்ற அவுஸ்திரேலிய பெண்கள் அணி பட்டிங்கை தேர்வு செய்தது.

50 ஓவர்கள் முடிவில் அவுஸ்திரேலியா அணி 7 விக்கெட்டுகளை இழந்து 338 ரன்கள் குவித்தது. இந்திய தரப்பில் ஸ்ரேயங்கா பாட்டீல் 3 விக்கெட்டுகளையும், அமன் ஜோத் கௌர் 2 விக்கெட்டுகளையும், தீப்தி ஷர்மா மற்றும் பூஜா வஸ்த்ராக்கர் தலா ஒரு விக்கெட் கைப்பற்றினர்.

கடின இலக்கை துரத்திய இந்திய அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி காத்திருந்தது. இந்திய அணியின் துவக்க வீராங்கனையான யாஸ்திகா பாட்டியா 6 ரன்களில் ஆட்டமிழந்தார். இவருடன் களமிறங்கிய ஸ்மிருதி மந்தனா 29 ரன்களில் பெவிலியன் திரும்பினார். அடுத்து வந்த ரிச்சா கோஷ் 19 ரன்களிலும், ஹர்மன்பிரீத் கௌர் 3 ரன்களிலும் ஆட்டமிழந்தனர்.

அடுத்தடுத்து களமிறங்கிய வீராங்கனைகளும் சொற்ப ரன்களில் ஆட்டமிழந்து ஏமாற்றினர். இதன் காரணமாக இந்திய அணி 32.4 ஓவர்களில் 148 ரன்களை மட்டும் குவித்து அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தமை குறிப்பிடத்தக்கது.(நி-5-6)

# மைதானத்தை மாற்றும் பஞ்சாப் கிங்ஸ்



பஞ்சாப் கிங்ஸ் அணி இந்த ஐ.பி.எல். சீசனில் சொந்த மைதானத்தை மாற்ற உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

மொகாலிக்கு பதில் பஞ்சாப் மாநிலம் முல்லான்பூரில் உள்ள மகாராஜா யத்விந்தர் சிங் சர்வதேச மைதானத்தை உள்ளூர் மைதானமாக மாற்ற பஞ்சாப் கிங்ஸ் அணி திட்டமிட்டுள்ளது. முல்லான்பூர் மைதானம் ரூ.230 கோடி செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.

மொகாலியில் உள்ள ஐ.எஸ்.பிந்த்ரா மைதானத்தை விட முல்லான்பூர் ஸ்டேடியம் அதிக இருக்கைகளுடன் பிரமாண்டமாக கட்டப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3009

**காருண்யா**

வெயில் காலத்திற்கும் பனி காலத்திற்கும் நூல் அளவு தான் வித்தியாசம்



எப்படா குளிக்க போறோம்னு யோசிச்சா அது வெயில் காலம் ஏன்டா குளிக்க போறாம்னு யோசிச்சா அது பனி காலம்.

**மிதன்**

கம்பெனி முன்னேற்றத்துக்கு பாடுபடுறவங்களுக்கு போனஸ் குடுக்கிற மாதிரி...



எனக்கும் கடவுள் இந்த 2024 பாக்க குடுத்து வைச்சிருக்காங்க.. ஏனா எத்தனை பேர் இத பாக்காம போயிட்டாங்க...

**லக்சி**

கடன் அன்பை மட்டும் முறிப்பது இல்லை,



உன்.. சம்பளம், சந்தோசம், வீடு, நிலம்... இவைகளையும் கூட முறித்து விடுகிறது... கடன் வட்டிக்கு வாங்காதீங்கப்பா..

**பவிஷ்**

பேரு என்னவோ அழைபேசிதான்.. ஆனா அழைப்பு ஒன்னும் வரமாட்டிங்குது.



ஏதே அப்பப்ப வாட்சப்ல ஒரு மெசேஜ் வருது... அவ்ளோதான்

**யது**

வருசமாடா இது... நேற்று நிலநடுக்கம்...




இன்னைக்கு இறங்குன பிளைட்டு தீப்பிடிச்சி எரியுது...

**சபரீஷா**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை [illegible] www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் [illegible] பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் மயமாகும் மின்சாரசபை
# எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம்

**(கொழும்பு)**

**இலங்கை மின்சாரசபையை தனியார் மயப்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பாரிய போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.**



இந்த போராட்டம் நேற்று கொழும்பில் உள்ள மின்சார சபையின் பிரதான காரியாலயத்திற்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கம் இலங்கை மின்சார சபையை இந்தியாவின் அதானி குழுமத்திற்கு விற்பனை செய்யவுள்ளதாக சில தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடளாவிய ரீதியில் உள்ள ஆயிரக்கணக்கான மின்சார சபை ஊழியர்கள் மற்றும் மின்சார சபையுடன் தொடர்புடைய ஆறு சங்கங்களின் உறுப்பினர்களும் இந்த போராட்டத்தில் இணைந்துள்ளனர்.

மேலும் பாதுகாப்பு கருதி சம்பவ இடத்தில் பெருமளவிலான பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். (நி-5-6)

# புது வருடத்தின் அமர்வு 9 இல் ஆரம்பம்

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டின் முதலாவது பாராளுமன்ற அமர்வு ஜனவரி 9 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

குறித்த பாராளுமன்ற அமர்வு எதிர்வரும் 9ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் 12ஆம் திகதி சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இது பற்றிய தீர்மானம் எடுக்கப்பட்டது. (நி-5-6)

# வற் அதிகரிப்பால் உயிரிழப்புகள் ஏற்படலாம்

## சஜித் எச்சரிக்கை

(கொழும்பு)

புதிதாக அமுல்படுத்தப்பட்டுள்ள பெறுமதி சேர் வரி மக்களின் துயரத்தை மேலும் அதிகரிக்கச் செய்யும் என்றும் இதனால் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக உயிரிழப்புகள் ஏற்படலாம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எச்சரிக்கை விடுத்துள்ளார்.

குடும்பத் தேவைகளை பூர்த்தி செய்து பிள்ளைகளுக்கு உணவளிக்க முடியாததன் காரணமாக குடும்பங்களில் தற்கொலை சம்பவங்கள் பதிவாகி வருவதாக பிரேமதாச சுட்டிக் காட்டினார்.

தற்போதைய அரசாங்கம் மக்களின் அவலத்தை மேலும் கூட்டி வருவதாகத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் புதிய வற் வரியை அமுல்படுத்துவது அத்தகைய நடவடிக்கையாகும் என அவர் தெரிவித்தார். (நி-5-6)

# அரசை விரட்ட தயாரான மக்கள்

## இராதாகிருஷ்ணன் எச்சரிக்கை

(கொழும்பு)

வற் வரி அதிகரிப்பால் நடுத்தர மற்றும் கீழ் மட்டங்களில் உள்ளவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அன்று வற் வரியை குறைத்து தனது பதவியை இழந்தார்.


அதேபோல ரணில் விக்கிரமசிங்க இன்று வற் வரியை அதிகரித்து தனது பதவியை இழக்கப் போகின்றார்.வற்வரி அதிகரிப் பையே இந்த அரசு மக்களுக்கு பரிசாக வழங்கியுள்ளது.

விலை அதிகரிப்பு, பொருட்கள் தட்டுப்பாடு போன்ற செய்திகளே புத்தாண்டில் வெளிவருகின்றன.

இந்நிலையில் வற் வரி அதிகரிப்பால் நடுத்தர மற்றும் கீழ் மட்டங்களில் உள்ளவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். ஏனையவர்களுக்கும் பெரும் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த வருடம் தேர்தல் வருடம். இந்த அரசை விரட்ட மக்கள் தீர்மானித்துவிட்டனர்.எனவே, தோல்விக்காக இந்த அரசு காத்திருக்கின்றது என்றே கூற வேண்டும் எனவும் தெரிவித்தார். (நி-5-6)

# 31ம் நாள் நினைவஞ்சலி



எமது பழைய மாணவர் சங்கத்தின் முன்னாள் செயற்குழு உறுப்பினர்

**வேலும்மயிலும் சிவபாதசுந்தரம்**

(ஓய்வுநிலை நில அளவை உதவி அத்தியட்சகர்)

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

[சி-8073]

**பழைய மாணவர் சங்கம்**
**யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.**

# இராசிபலன்

04.01.2024
மார்கழி 19, வியாழக்கிழமை
அட்டமி முன்னிரவு 7.42 மணிவரை

அத்தம் பிற்பகல் 3.44 மணிவரை
சுபநேரம் -8.01-9.31 மணிவரை
இராகுகாலம்-2.01-3.31 மணிவரை

சித்தாமிர்தம்
சந்திராஷ்டமம்
சதயம் , பூரட்டாதி.

**வளவன்**





உற்சாகத்தோடு பணி புரியும் நாள், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், தொழிலில் இடையூறாக இருந்தவர்கள் விலகுவர், ஆரோக்கியமான நாள்.




பெரியோர்களின் ஆசி கிடைக்கும், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், சகோதர ஒற்றுமை மேலோங்கும், புதிய முயற்சிகள் கைகூடும்.




குடும்ப உறுப்பினர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.




வருமானம் திருப்திகரமானதாக அமையும், எதிர்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறும் நாள், தேகநலனில் தெளிவு பிறக்கும், புதிய முயற்சிகள் கைகூடும்.




சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், புதிய சொத்து வாங்கும் எண்ணம் உருவாகும், தாழ்ந்த சுபாவமுண்டு.




ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள், சிறப்பான நாள், பணப்புளக்கம் அதிகரிக்கும் நாள்.




குடும்ப மகிழ்ச்சி கூடும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், காரிய அனுகூலமுண்டு.




நண்பர்கள் மனம் கோணாது நடந்து கொள்வது நல்லது, மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றிமறையும், திருடர் பயமுண்டு, முயற்சிகளில் சிறுதடை தாமதங்கள் ஏற்படலாம்.




பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.




குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புக்களும் கூடலாம், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டு அகலும் விரும்பிய காரியம் விரும்பியபடியே கைகூடும்.




நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.




தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வருமானம் திருப்தி தரும் , கனவுபலிதமுண்டு, வழிபாடு ஆனந்தம் தரும், கௌரவமான நாள்.

மனதை அடக்கி வைப்பது தான் மனிதனுக்கு கஷ்டமான காரியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்ப்புகளை மீறி

## அமைக்கப்பட்ட மதுபானசாலை

## அகற்றுமாறு கோரி ஆர்ப்பாட்டம்

(கரணவாய்)

**உடுப்பிட்டியில் பொது இடங்களுக்கு அருகில் திறக்கப்பட்டுள்ள மதுபானசாலையை அகற்றக் கோரி அப்பகுதி மக்களால் நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**



அண்மையில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் குறித்த மதுபான சாலையை தற்காலிகமாக மூடுமாறு உத்தரவிடப்பட்டிருந்து. அதிகாரி ஒருவரின் சிபாரிசில் மீண்டும் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மதியை போக்கும் மதுவை அனுமதிக்காதே, பாடசாலைக்கு செல்லும் வழியில் மதுபான சாலை வேண்டாம், மாணவ சமுதாயத்தை சீரழிக்காதே உள்ளிட்ட கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டதோடு பிரதேச செயலாளருக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. இதற்கு வலுச்சேர்க்கும் வகையில் உடுப்பிட்டி பகுதியில் கடையடைப்பும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-33-60)

# போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த இருவர் கைது

## கஞ்சா, ஐஸ்போதை மீட்பு

(குருமன்காடு)

வவுனியா, சிதம்பரபுரம் பகுதியில் போதைப்பொருள் வைத்திருந்த சந்தேகத்தின் அடிப்படையில் காதல் ஜோடி ஒன்று கைது செய்யப்பட்டு நீதி மன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டுள்ளதாக சிதம்பரபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் சிதம்பரபுரம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் சோதனை செய்த போது, அங்கு தங்கி இருந்த காதல் ஜோடியிடம் தொலைபேசியினுள் கஞ்சா மறைத்து வைக்கப்பட்ட நிலையில் ஐஸ் போதைப் பொருளும் கண்டு பிடிக்கப்பட்டது. இதனையடுத்து கஞ்சா மற்றும் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டதுடன், அதனை உடமையில் வைத்திருந்த இருவரும் கைதுசெய்யப்பட்டனர்.

இந்நிலையில் நீதி மன்றத்தில் காதலர்கள் இருவரும் ஆஜர்ப்படுத்தப் படஉள்ளதுடன் அவர்களிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்கும் பொலிஸார் நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5-6-250)

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் 12 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் டெங்கு பரவும் வகையில் சுற்றுசூழலை வைத்திருந்த காணி உரிமையாளர்கள் 12 பேருக்கு எதிராக சுகாதார பிரிவினரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

டெங்கு நோய் பரவலை கட்டுப்படுத்தும் வகையில் வடமாகாண பிரதம செயலாளர் தலைமையில் அண்மையில் நடைபெற்ற கலந் துரையாடலின் படி கடந்த திங்கட்கிழமை முதல் சிரமதான பணிகள் முன் னெடுக்கப்பட்டு டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்கு ஒத் துழைக்காதவர்களுக்கு கடும் நடவடிக்கை எடுக் குமாறு பணிக்கப்பட்டது.

சுகாதார திணைக்களம், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொலிஸார், இராணுவம் ஆகியோரே குறித்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (நி-5-6-33)

## 15 லீற்றர் கசிப்புடன் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோப்பாய் பகுதியில் நீண்ட காலமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த ஆண் ஒருவரும் பெண்ணொருவரும் யாழ்.மாவட்ட பொலிஸரின் விசேட சுற்றி வளைப்பின் போது கைது செய்யப்பட்டுள்ளனர். நீண்ட நாட்களாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வருவதாக பொலிஸாருக்க கிடைத்த தகவலையடுத்து நேற்று விசேட சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது. இதன் போது குறித்த இருவரிடமிருந்தும் 15 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது. (நி-5-6-33)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 650 | 800 | 650 | 800 |
| உருளைக்கிழங்கு | 170 | 150 | 150 | 150 |
| பச்சைமிளகாய் | 1400 | 1200 | 1200 | 1000 |
| தக்காளி | 800 | 700 | 800 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 150 |
| கோவா | 450 | 450 | 500 | 600 |
| கரட் | 800 | 700 | 900 | 1000 |
| பூசணி | 160 | 160 | 150 | 240 |
| புடோல் | 320 | 300 | 200 | 350 |
| வாழைக்காய் | 200 | 250 | 200 | 250 |
| சின்ன வெங்காயம் | 500 | 450 | 450 | 500 |
| பெரிய வெங்காயம் | 450 | 450 | 400 | 500 |
| பாகற்காய் | 800 | 800 | 600 | 1000 |
| வெண்டக்காய் | 350 | 300 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 120 | 150 |
| பயற்றங்காய் | 500 | 300 | 300 | 500 |
| லீக்ஸ் | 450 | 400 | 550 | 600 |
| பீற்றூட் | --- | 600 | 600 | 800 |
| கறிமிளகாய் | 800 | 500 | 600 | 1000 |
| முருங்கைக்காய் | --- | --- | --- | --- |
| போஞ்சி | 600 | 400 | 600 | 600 |
| கத்தரிதம்புள்ள | 600 | 600 | 450 | 750 |
| கீரை - 1 பிடி | 150 | 150 | 150 | 250 |
| தேசிக்காய் | 600 | 600 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 100 | 80-110 |
| இராசவள்ளி | 800 | 750 | 550 | 600 |
| வெங்காயப்பூ | 900 | 1000 | 600 | 1200 |
| முள்ளங்கி | 200 | 300 | 300 | 400 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 120 | 60 |
| வல்லாரை | 100 | 40 | 50 | 80 |
| ஈரப்பலா | 100 | 200 | 120 | 150 |

## தேய்பிறை அட்டமி

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொக்குவில் தலையாழி ஞானவைரவர் ஆலயத்தில் தேய்பிறை அட்டமி உற்சவம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது. வசந்தமண்டபப் பூசை, நெய் விளக்கேற்றலுடன் சகஸ்ரநாம அர்ச்சனையும் இடம் பெறும். (நி-5-6)

## மாணவர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

மீசாலை பன்றிக்கேணி ஆலய சமூகத்தினரால் தேசிய மட்ட வில்லுப்பாட்டில் முதலிடம் பெற்ற அல்லாரை அ.த.க வித்தியாலய மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நாளை மறுதினம் நண்பகல் 12.30 மணிக்கு ஆலயத்தில் இடம் பெறவுள்ளது. (நி-5-6)

# வட்டு.இளைஞனின் மரணம் 'மனித ஆட்கொலை' எனத் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வட்டுக்கோட்டை பொலிஸாரினால் சித்திரவதைக்கு உள்ளாகி உயிரிழந்த இளைஞனின் மரணம் "மனித ஆட்கொலை" என யாழ்.நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் கட்டளை வழங்கியுள்ளது.

உயிரிழந்த இளைஞனின் குறித்த வழக்கு நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது.

இளைஞனின் பிரேத பரிசோதனை அறிக்கை மன்றிற்கு கிடைக்கப்பெற்றது. அதில் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட காயங்கள் இளைஞனின் உடலில் காணப்பட்டதாகவும் இதனால் உயிரிழப்பு நேர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த வழக்கு விசாரணைகளில் 21 சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதன் அடிப்படையில் இளைஞனின் உயிரிழப்பு, மனித ஆட்கொலை என நீதிவான் மரண விசாரணை கட்டளையின் போது குறிப்பிட்டார்.

இரண்டாவது சாட்சி ஐந்து பொலிஸார் சித்திரவதை செய்ததாக தெரிவித்த நிலையில், இது வரையில் நால்வரே கைது செய்யப்பட்டுள்ள நிலையில் மற்றைய சந்தேக நபரையும் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தி மன்றில் முன்னிலைப்படுத்துமாறு இந்த வழக்கின் விசாரணை பொறுப்பதிகாரிக்கு உத்தரவிட்டார்.

அத்துடன் குறித்த குற்றத்தில் பொலிஸார் ஈடுபட்டிருப்பதால் நீதிமன்ற கட்டளையின் பிரதியை பொலிஸ்மா அதிபருக்கு அனுப்புமாறு மன்று கட்டளையிட்டது.

குறித்த வழக்கு விசாரணை ஆவணங்களை சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு பாரப்படுத்துமாறு நீதிமன்ற பதிவாளருக்கு நீதிவான் அறிவுறுத்தினார். அதனை தொடர்ந்து கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள நான்கு பொலிஸ் உத்தியோகஸ்தர்களின் விளக்கமறியலை எதிர் வரும் 16ஆம் திகதி வரை நீதிவான் நீடித்துள்ளார். (நி-5-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம்-09, காங்கேசன்துறை வீதி, 693/4, 693/5, என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை சங்கரப்பிள்ளை திருஞானசுந்தரமும் பெண் இரத்தினம்மாவும் (தனது அற்றோனி தத்துவக்காரர் சங்கரப்பிள்ளை திருஞானசுந்தரம் மூலம்) 22.08.1988 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு தில்லையம்பலம் ஜெகதீசன் முகதாவில் 2368 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதி மூலம் கந்தையா அரியநாயகமும் பெண் கமலாம்பாளுக்கும் நிலப்பரப்பு 01 குளி 12.30 இனை வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனத்தை சங்கரப்பிள்ளை திருஞானசுந்தரமும் பெண் இரத்தினம்மாவும் (தனது அற்றோனி தத்துவக்காரர் சங்கரப்பிள்ளை திருஞானசுந்தரம் மூலம்) 22.08.1988 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு தில்லையம்பலம் ஜெகதீசன் முகதாவில் 2369 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதி மூலம் சண்முகம் கார்த்திகேசு தனபாலசிங்கமும் பெண் தனலட்சுமிக்கும் நிலப்பரப்பு 01 குளி 8.25 இனை வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனத்தை சங்கரப்பிள்ளை திருஞானசுந்தரமும் பெண் இரத்தினம்மாவும் (தனது அற்றோனி தத்துவக்காரர் சங்கரப்பிள்ளை திருஞானசுந்தரம் மூலம்) 22.08.1988 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு தில்லையம்பலம் ஜெகதீசன் முகதாவில் 2370ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதி மூலம் கந்தையா திருலோகநாதன் பெண் புஸ்பராணிக்கு நிலப்பரப்பு 02 குளி 6 இனை வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனத்தை சங்கரப்பிள்ளை திருஞானசுந்தரமும் பெண் இரத்தினம்மாவும் 02.03.1989ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு தில்லையம்பலம் ஜெகதீசன் முகதாவில் 2566 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதி மூலம் கண்ணுத்துறை தேவதாஸ் என்பவருக்கு நிலப்பரப்பு 01 குளி 15.79 இனை வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம், கொக்குவில் கிழக்கு, சம்பியன் ஒழுங்கை, இலக்கம் 26/2 ஐ, சேர்ந்த கார்த்திகேசு தனபாலசிங்கமும் தனபாலசிங்கம் தனேந்திராவும் ஆகிய அவர்கள் 21.03.2005 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு மாணிக்கம் தியாகராசா முகதாவில் 7938 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட சீதன உறுதி மூலம் கனகரத்தினம் அன்ரன் ரட்ணதீபன் பெண் தனஜாவுக்கு வழங்கியுள்ளனர்.

**ஆதன அட்டவணை 1**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று, வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை "வாரிவளவு" நிலப்பரப்பு 9 குளி 12.30 இதில் முன்பே அறுதி விற்றவை போக மிகுதியில் நிலப்பரப்பு ஒன்று குளி எட்டு தசம் இரண்டு ஐந்து (நில பர.1 குளி 8.25) இது நில அளவையாளர் வி.நகுலேஸ் அவர்களால் 15.6.1988இல் 162 ஏ இலக்கத்தில் வரைந்த படத்தில் துண்டு 5 என காட்டப்பட்டுள்ளது. இதற்கு எல்லை.

கிழக்கு: க.திருநாவுக்கரசுவிற்கும் மறுபெயருக்குமுரிய ஆதனங்கள்.
வடக்கு: குறித்த படத்தில் துண்டு 4 இற்குச் சொந்தக்காரர்களான பாலசிங்கம் உதயகுமாரும் பெண் தவமணிக்கும் உரிய ஆதனங்கள்.
மேற்கு: குறித்த படத்தில் 7 ஆம் துண்டாகிய 10 அடி அகலப்பாதை.
தெற்கு: குறித்த படத்தில் 6 ஆம் துண்டாகிய மிகுதியாதனம் இதடங்கலும் இதன் தெற்கெல்லையில் இருக்கும் தண்ணீர் தாங்கியும் அதனோடு சேர்ந்த நிலமும் இதற்குச் சேர்ந்தவைகளும்.

**ஆதன அட்டவணை 2**

மேற்படி இறை "வாரிவளவு" குளி 14.96 இது மேற்குறித்த படத்தில் துண்டு 7 எனக் காட்டப்பட்டுள்து. இதற்கு எல்லை
கிழக்கு: குறித்த படத்தில் துண்டு 5ம், 6ம் இதன்கீழ் வரும் 3ம் ஆதனமும்.
வடக்கு: குறித்த படத்தில் துண்டு 4 ம், துண்டு 6ம்.
மேற்கு: குறித்த படத்தில் துண்டு 1ம், 2ம், 3ம்.
தெற்கு: ஜெகதீசன் ஜெயந்தியும் ஆதனம், இன் பத்தடி (10 அடி) பாதையால் 1ஆம் ஆதனத்திற்குப் போக்குவரத்துச் செய்யும் உரித்தும்.

**ஆதன அட்டவணை 3**

மேற்படி இறை "புன்னையாள்வி வளவும் சொடுதலையன் வளவும் நீத்தான் வளவும்" குளி 15.6 இது நில அளவையாளர் கே. ஐயாறு அவர்களால் 1967.11.04ஆம் 810 ஆம் இலக்கத்தில் வரைந்த படத்தில் துண்டு 2 எனக் காட்டப்பட்டுள்ளது. இதற்கு எல்லை.
கிழக்கு: காங்கேசன்துறை றோட்.
வடக்கு: கே.வி. செல்லையாவிற்குரியாதனமும் குறித்த படத்தில 1ஆம் துண்டு.
மேற்கு: திருஞானசுந்தரம் பெண் இரத்தினம்மாவிற்குரிய ஆதனம்.
தெற்கு: எஸ்.சிவகுருநாதருக்குரிய ஆதனம். இவ்வாதனத்தால் 1ஆம் ஆதனத்திற்குப் போக்குவரத்துச் செய்யும் உரித்து மட்டும்.

தற்போது கனகரத்தினம் அன்ரன் ரட்ணதீபன் பெண் தனஜாவும் இவ்வாதனத்தைத் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது கனகரத்தினம் அன்ரன் ரட்ணதீபன் பெண் தனஜா என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

ஆணையாளர்,
யாழ்.மாநகர சபை.

(சி-8272)

# கச்சதீவு இலங்கைக்கே சொந்தமானது

## தமிழகத்தில் ஜீவன் இடித்துரைப்பு

(சென்னை)

**"கச்சதீவு இலங்கைக்கே சொந்தமானது" என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.**



மறைந்த நடிகரும் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் தலைவருமான விஜயகாந்தின் நினைவிடத்துக்குச் சென்று அஞ்சலி செலுத்திய பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது கொள்ளையர்களைப் பயன்படுத்தி தமிழக மீனவர்களை தாக்க வேண்டிய அவசியம் இலங்கை அரசுக்கு இல்லை எனவும் அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# வரி தொடர்பில் தெளிவுபடுத்தல் அவசியம்

## அஜித் மான்னப்பெரும கோரிக்கை

(கொழும்பு)

மக்களிடம் வசூலிக்கும் வரிப்பணத்தை எவ்வாறு செலவிடுவது என்பது தொடர்பில் முழுமையான அறிக்கையை மக்களுக்கு வழங்குமாறு கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தினால் அறவிடப்படும் வரிகள் எவ்வாறு செலவிடப்படுகின்றன என்பது தொடர்பில் மக்கள் மத்தியில் தெளிவான நம்பகத்தன்மை இல்லாத காரணத்தினால் இது தொடர்பில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்த இவ்வாறான வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவது காலத்தின் பொருத்தமானது என சுட்டிக்காட்டிய பாராளுமன்ற உறுப்பினர் அவ்வாறான வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்தினால் மக்கள் வரி செலுத்தும் முறைக்கு மிகவும் இணக்கமாக இருப்பார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (நி-5-6)

**பொலித்தீன் உற்பத்தி**

# 108 நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

கடந்த ஆண்டு தடைசெய்யப்பட்ட பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை உற்பத்தி செய்த 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதில் 180 இற்கும் மேற்பட்ட நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய சுகாதார அதிகார சபையின் கழிவு முகாமைத்துவ பிரிவின் பிரதி பணிப்பாளர் நாயகம் அஜித் வீரசுந்தர தெரிவித்துள்ளார். (நி-5-6)

# நிலம், வாகனம் வாங்குவதற்கு வரி எண் கட்டாயம் - ஷெகான்



(கொழும்பு)

பெப்ரவரி 1 ஆம் திகதி முதல், மொபைல் வங்கி கணக்கு தொடங்கும் போதும் கட்டட திட்டங்களுக்கு ஒப்புதல் கோரும் போதும் வாகனம் பதிவு செய்யும் போதும் போக்குவரத்து வருவாய் உரிமம் புதுப்பிக்கும் போதும் நில உரிமை பதிவு செய்யும் போதும் வரி அடையாள எண் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வரி அடையாள இலக்கம் பெறப்பட்டால் வரி செலுத்த வேண்டிய கட்டாயம் இல்லை என இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

வருடாந்த வரி விலக்கு வரம்பான 12 இலட்சம் ரூபாவிற்கு மேல் வருமானம் ஈட்டும் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டுமே வரி செலுத்த வேண்டியவர்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

## அசாமில் பேருந்து விபத்து 14 பேர் பலி; 30 பேர் காயம்



(டில்லி)

அசாம் மாநிலத்தில் ஏற்பட்ட பேருந்து விபத்தில் 12 பேர் உயிரிழந்துள்ளதுடன் 30 பேர் காயமடைந்துள்ளனர்.

குறித்த விபத்து, நேற்று அதிகாலை 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

நிலக்கரி ஏற்றிச் சென்ற லொறி ஒன்று பேருந்துடன் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்து தொடர்பில், பொலிஸார் கூறுகையில், அந்த பேருந்தில், 45 பேர் இருந்ததாகவும் அவர்கள் சுற்றுலா சென்று திரும்பிக்கொண்டிருந்ததாகவும் தெரிவித்துள்ளனர். (நி-5-6)

## ஜப்பான் நிலநடுக்கத்தின் பலி எண்ணிக்கை அதிகரிப்பு



(டோக்கியோ)

ஜப்பானின் வடக்குப் பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 62 ஆக உயர்ந்துள்ளது.

நேற்று முன்தினம் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 30 ஆக காணப்பட்டிருந்த நிலையில் தற்பொ முது 62 ஆக உயர்ந்துள் ளது.

மேலும் 300 இற்கும் அதிகமானோருக்கு காயங்களும் 20 பேருக்கு பலத்த காயங்களும் ஏற்பட்டுள்ளது. நிலநடுக்கத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம். இதுவரை நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 31 ஆயிரத்து 800 பேர் முகாம்களில் தஞ்சம் அடைந்துள்ளனர். (நி-5-6)

# பிரிக்ஸ் அமைப்பி

# ஐந்து புதிய உறு

(மொஸ்கோ)

**பிரிக்ஸ் அமைப்பில் எகிப்து, எத்தியோப்பிய சவுதிஅரேபியா மற்றும் ஐக்கிய அரபு அமிரகப் புதிய உறுப்பு நாடுகளாக அதிகாரபூர்வமாக அ பெற்றுள்ளன.**

பிரிக்ஸ் அமைப்பின் தலைமை பொறுப்பை வகிக்கும் நாடான ரஷ்யாவின் ஜனாதிபதி விளாடிமிர் புடின் இதனை தெரிவித்துள்ளார்.

பிரிக்ஸ் என்பது உலகின் வளரும் நாடுகளின் குழுவாகும். இதுவரை இந்தியா, ரஷ்யா, சீனா, தென்னாபிரிக்கா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகள் மட்டுமே பிரிக்ஸ் அமைப்பில் இடம்பெற்றிருந்



தன.

இ

ஆன

நை

போ

யும்

க்க

டது.

பிரிக்

காட்

எ

ஏற்ப

பிறகு


## இந்து மத பிரதிபலிப்புடன் திருச்சி விமான நிலையம்

(டில்லி)

இந்தியாவின் திருச்சி விமான நிலையத்தின் புதிய வடிவமைப்பானது இந்து மதத்தின் பிரதிபலிப்பை எடுத்துக்காட்டும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

திருச்சி சர்வதேச விமான நிலையத்தில் 951 கோடி இந்திய மதிப்பில் கட்டப்பட்ட பயணிகள் முனையமானது நேற்று முன்தினம் இந்திய பிரதமர் நரேந்திரமோடியினால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த முனையம் 60,723 சதுரமீற்றர் பரப்பளவில் 2 அடுக்குகளைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. இதில், ஒரே நேரத்தில் 4,000 சர்வதேச பயணிகள் மற்றும் 1,500 உள்நாட்டு பயணிகளின் நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம் என கூறப்படுகிறது. இந்த புதிய பயணிகள் முனையத்தின்



சிறப்பாக இந்தியாவின் தமிழ் கலாசார, பண்பாடு மற்றும் திருவிழாக்களை மையமாக கொண்டு ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.

ஸ்ரீரங்கம் ஆலயத்தின் ராஜகோபுரம் போன்ற மாதிரி கோபுரம் புதிய முனையத் தின் முகப்பில் வண்ணமய மாக பார்ப்போர் கண்களை கவரும் வகையில் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் உட்செல்லும் வெளியேறும் வாயில்களிலும் இந்து ஆலய கோபுர முகப்பு வளைவுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

உள்ளே சுவரில் நடராஜர் சிற்பங்கள், இந்து கடவுள்களின் படங்களும் வரையப்பட்டுள்ளதுடன் பிரமாண்ட திரையில் ஆலய தேர் கலாசார நடனங்களும் உள்ளன. இந்த முனையத்தில் சூரிய சக்தி மூலம் மின்சாரம் தயாரிக்கும் வகையில் விமான

## ஜப்பானில் விபத்துக்குள் 5 பணியாளர்கள் பல

(டோக்கியோ)

ஜப்பானில் டோக்கியோ நகரில் உள்ள ஹனேடா விமான நிலையத்தின் ஓடு தளத்தில் தரையிறங்கிய ஜப்பான் ஏர்லைன்ஸ் பயணிகள் விமானத்தின் பின் பகுதியில் திடீரென தீ பிடித்து எரிந்து கடலோர காவல் படை விமானத்தின் மீது மோதியதால் 5 பணியாளர்கள் உயிரிழந்ததோடு 17 பயணிகள் படுகாயமடைந்துள்ளனர்.

விபத்து தொடர்பில் தகவலறிந்து விரைந்து வந்த தீயணைப்புத் துறையினர் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.



இதேவேளை, ஜப்பான் ஏர்லைன்ஸ் விமானத்தில் 360 இற்கும் மேற்பட்ட பயணிகள் உட்பட மொத்

தம் 3

அவ


பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ப்பில் இணைந்த

# உறுப்பு நாடுகள்

**ோப்பியா, ஈரான்,**
**மிரகம் ஆகியன**
**ாக அங்கத்துவம்**




தன.

இந்நிலையில், கடந்த ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைபெற்ற உச்சிமாநாட்டின் போது, இந்த ஐந்து நாடுகளையும் பிரிக்ஸ் அமைப்பில் சேர்க்க முறையான ஒப்பந்தம் ஏற்பட்டது.

மேலும், ஆர்ஜென்டினாவும் பிரிக்ஸ் அமைப்பில் சேர ஆர்வம் காட்டியது.


எனினும் தேர்தலுக்குப் பின் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு, ஆர்ஜென்டினா ஒரு இடைவெளியைக் கடைப்பிடித்தது.

இதற்கமைய பிரிக்ஸ் அமைப்பின் கொள்கைகளைப் பகிர்ந்து கொள்ளும் ஆதரவாளர்கள் மற்றும் நாடுகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதாக புடின் தெரிவித்தார்.

இதன்படி ரஷ்யாவின் 2024 பிரிக்ஸ் தலைவர் பொறுப்பு அனைத்து நாடுகளுடனும் நேர்மறையான மற்றும் ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும் என்று புடின் தெரிவித்துள்ளார். (நி-5-6)

## இந்தோனேசியாவில்

# எரிமலை வெடிப்பு 2000 பேர் வெளியேற்றம்



(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் கிழக்கிலுள்ள லெவாடோபி எரிமலை குமுறி வருவதை அடுத்து 2,000 இற்கும் மேற்பட்டோர் தற்காலிகக் காப்பிடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை ஒன்றரை கிலோமீற்றர் தொலைவிற்கு அது சாம்பலைக் கக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

லெவொடோபி எரிமலை வெடிப்பால் ஃபிரான் சேடா விமான நிலையம் மூடப்பட்டுள்ளதாக அரசாங்க ஊடகம் தெரிவித்தது. அவ்விமான நிலையம், எரிமலையிலிருந்து 80 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது.

இந்தோனேசியாவில் கிட்டத்தட்ட 130 எரிமலைகள் உயிர்ப்புடன் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த டிசெம்பரில் சுமத்ரா தீவிலுள்ள மவுண்ட் மெராப்பி எரிமலை வெடிப்பால் 23 பேர் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# ஆப்கானில் அடுத்தடுத்து ஏற்பட்ட நிலநடுக்கங்கள்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் அடுத்தடுத்தாக இரண்டு நிலநடுக் கங்கள் ஏற்பட்டதாக நில அதிர்வுக்கான தேசிய மையம் தெரிவித்துள்ளது.

குறித்த நிலநடுக்கங்கள் ஆப்கானிஸ்தானின் பைசாபாத்தில் நேற்று பதிவாகியுள்ளதோடு முதல் நிலநடுக்கம் 4.4 ரிக்டர் அளவில் பதிவாகியுள்ளது.

அரைமணி நேரத்திற்குள் அடுத்தடுத்து ஏற்பட்ட நிலநடுக்கங்களால் அப்பகுதியில் வசிக்கும் மக்கள் அச்சத்தில் உள்ளனர். (நி-5-6)

# க்குள்ளான விமானங்கள் பலி; 17 பேர் காயம்



தம் 379 பேர் இருந்த நிலை யில் அவர்கள் அனைவரும் பாதுகாப்பாக மீட்கப்பட்டதாகவும் இந்த நிலையில், கடற்படை விமானத்தில் இருந்த ஊழியர் கள் 5 பேர் உடல் கருகி உயிரிழந்துள்ளதாகவும் ஜப்பானிய அரச ஊடகம் தகவல் தெரிவித்துள்ளது.

மேலும் ஜப்பானில் கடந்த திங்கட்கிழமை ஏற்பட்ட நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நிவாரணப் பொருட்களை ஏற்றிக் கொண்டு அந்த கடலோர காவற்படை விமானம் நிகாட்டா விமான நிலையத்திற்கு செல்லவிருந்த நிலையிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (நி-5-6)

# இஸ்ரேல் இராணுவத் தாக்குதலில் ஹமாஸின் துணைத் தலைவர் பலி



(பெய்ரூட்)

லெபனானின் தெற்கு பெய்ரூட்டில் நடந்த தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் [illegible] அல்-அரூரி கொல்லப்பட்டதாக சர்வேதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஹமாஸ் அலுவலகத்தை குறிவைத்து நடத்தப்பட்ட ஆளில்லா விமான தாக்குதலில் ஹமாஸ் துணைத் தலைவர் கொல்லப்பட்டதாக லெபனான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஹமாஸ் அதிகாரிகளுக்கும் லெபனான் முஸ்லிம் குழுவிற்கும் இடையிலான சந்திப்பின் போது இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறப்படுகிறது.

மேலும் இந்த தாக்குதலில் நான்கு பாலஸ்தீனியர்களும் மூன்று லெபனானியர்களும் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

காசாவில் கடந்த ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி முதல் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் நடத்தி வரும் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 22000ஐ கடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு பலன்கள் - 2024






## சாதுர்யமாகப் பேசி பழைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள்!

வாக்குறுதி என்பது சத்தியத்துக்கும் மேலானது, என்பதை உணர்ந்த நீங்கள் சொன்ன சொல் தவறமாட்டீர்கள். இனிய வார்த்தைகள் இரும்புக் கதவையும் திறந்துவிடும் என்பதை புரிந்த நீங்கள் சுவையான பேச்சில் சொக்க வைப்பீர்கள். இந்தப் புத்தாண்டு உங்கள் இராசிக்கு 5 ஆம் வீட்டில் சந்திரன் நிற்கும் நேரத்தில் பிறப்பதால் அடிப்படை வசதிகள் உயரும்.

புதிய திட்டங்கள் நிறைவேறும். சாதுர்யமாகப் பேசி பழைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள். கைமாற்றாகவும் கடனாகவும் வாங்கியிருந்த பணத்தை திருப்பித்தருவீர்கள். பிள்ளைகளால் அந்தஸ்து உயரும். பூர்வீக சொத்தில் சேர வேண்டிய பங்கை கேட்டு வாங்குவீர்கள். சமூகத்தில் பெரிய அந்தஸ்தில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். இந்த ஆண்டு முழுவதும் சனி பகவான் உங்கள் இராசிக்கு 11 ஆம் வீட்டில் தொடர்வதால் திடீர் யோகம், பணவரவு உண்டாகும். பொது விழாக்கள், கல்யாண, கிரஹப்பிரவேச சுப நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்துவீர்கள்.

புதன் 8 இல் மறைந்திருக்கும் நேரத்தில் இந்தாண்டு பிறப்பதால் நண்பர்கள், உறவினர்கள் மத்தியில் செல்வாக்கு கூடும். வருடப்பிறப்பு முதல் 30.4. 2024 வரை குருபகவான் உங்கள் இராசியில் ஜென்ம குருவாக நீடிப்பதால் அடுக்கடுக்காக வேலையிருந்துக் கொண் டேயிருக்கும். வருங்காலத்தைப் பற்றிய பயம் வந்து நீங்கும். வீட்டிலும், வெளி யிலும் சிலர் உங்களை புறக்கணிப்பது போலத் தோன்றும்.

அநாவசியமாக யாருக்காகவும் எந்த உறுதிமொழியும் தரவேண்டாம். உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்துவார்கள். சிறுசிறு அவமானங்கள் நெருங்கிய நட்புவட்டாரத்தில் வரக்கூடும். அரசாங்க அதிகாரிகளை பகைத்துக் கொள்ளாதீர்கள். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது. மற்றவர்களை நம்பி குறுக்கு வழியில் செல்ல வேண்டாம். குரு பகவான் 1.5.2024 முதல் வருடம் முடியும் வரை உங்கள் இராசியை விட்டு விலகி 2 ஆம் வீட்டில் அமர்வதால் சோர்வு, களைப்பு நீங் கும். உங்கள் கோபம் குறையும். குடும்பத்தில் இருந்த சண்டை, சச்சரவு நீங்கி அமைதி திரும்பும். ஈகோ பிரச்சினையால் பிரிந்தவர்கள் ஒன்று சேர்வீர்கள். தள்ளிப் போன கல்யாணம், சீமந்தம் நல்ல விதத்தில் முடியும்.

வங்கிக் கடன் கிடைத்து புது வீடு கட்டத் தொடங்குவீர்கள். உங்கள் மகளுக்கு எதிர்பார்த்த இடத்திலிருந்து வரன் அமையும். பூர்வீகச் சொத்துப் பங்கை கேட்டுவாங்குவீர்கள். அநாவசிய செலவுகள் இனி குறையும். பழைய கடனில் ஒரு பகுதியை கொடுப்பனவு செய்ய உதவிகள் கிடைக்கும். அதிக சம்பளம், சலுகையோடு நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்கும். கண்டும் காணாமல் சென்று கொண்டிருந்த உறவினர்கள் வலிய வந்து பேசுவார்கள். உடன் பிறந்தவர்கள் உங்களின் உண்மையான பாசத்தை உணர்வார்கள். சொந்த ஊரில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். வெளிநாடு செல்ல விசா கிடைக்கும்.

இந்த ஆண்டு முழுவதும் ராகு 12 ஆம் வீட்டில் மறைந்திருப்பதால் மறைமுக ஆதாயம் உண்டாகும். மின்சார, சமையலறை சாதனங்கள் பழுதாகும். திடீர் பயணங்களும் அலைச்சல்களும் அதிகரிக்கும் இக்காலகட்டத்தில் உணர்ச்சி வசப்பட்டு தவறான முடிவுகளை எடுக்க வேண்டாம். வழக்கில் அலட்சியம் காட்டாதீர் கள். கேது பகவான் வருடம் முடியும் வரை 6 ஆம் வீட்டில் அமர்ந்திருப்பதால் சூழ்ச்சிகளை முறிய டித்து வெற்றி பெறுவீர்கள். பெரிய பதவிகள் தேடிவரும். எல்லா வசதிகளும் நிறைந்த வீட்டுக்கு குடிபுகுவீர்கள்.

வியாபாரிகளே! புதிதாக தொழில் தொடங்கும் ஆசையில் மற்றவர்களை நம்பி பெரிய முதலீடுகள் எதுவும் செய்ய வேண்டாம். ஜனவரி, பெப்ரவரி, நவம்பர் மாதங்களில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். இலாபமும் அதிகரிக்கும். உத்தியோகஸ்தர்களே! மற்றவர்களின் வேலையையும் சேர்த்துப் பார்க்க வேண்டி வரும். சக ஊழியர்களின் சொந்த விடயங்களில் தலையிட வேண்டாம். அதிகாரிகள் தொடர்ந்து உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள். பதவி உயர்வு உண்டு. இந்த புத்தாண்டு திடீர் வளர்ச்சியையும், பிள்ளைகளால் நிம்மதியையும் தருவதாக அமையும்.

**பரிகாரம்:** அருள்பாலிக்கும் மீனாட்சி அம்மனை சென்று வணங்குங்கள். சாலை விபத்தில் சிக்கிய வருக்கு உதவுங்கள். கடன் பிரச்சினை தீரும்.






## புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள்!

பிறர் செய்ய முடியாத சவாலான காரியங்களை சாதித்துக் காட்டுவதில் வல்லவர்களான நீங்கள், சிறந்த பேச்சாளர்கள். சுற்றியிருப்பவர்களின் சுகத்துக்காக தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும் நீங்கள், பல நேரங்களில் தாமரை இலைத் தண்ணீர் போல் இருப்பீர்கள். உங்கள் இராசியை சுக்கிரனும் புதனும் பார்த்துக் கொண்டிருக்கும் நேரத்தில் இந்த புத்தாண்டு பிறப்பதால் குடும்பத்தில் அமைதி நிலவும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். பணவரவும் அதிகரிக்கும். கல்யாண முயற்சிகள் கைகூடும். வாகனம் வாங்குவீர்கள். பாதியிலேயே நின்ற வீடு கட்டும் பணி இனி தொடங்கும்.

உங்கள் இராசிக்கு 4 ஆம் வீட்டில் சந்திரன் நிற்கும் போது இந்த ஆண்டு பிறப்பதால் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பிரபலங்களின் பட்டியலில் இடம்பிடிப் பீர்கள். பணம் வரத் தொடங்கும். வழக்கு சாதகமாகும். வருடம் பிறக்கும் போது இராசிக்கு 8 இல் செவ்வாய் மறைந் திருப்பதால் சின்ன சின்ன விபத்துகள் வரும். முன்கோபம் அதிகரிக்கும். கணவன் - மனைவிக்குள் மனக் கசப்புகள் வரும். யாருக்காகவும் ஜாமீன் கையெழுத்திட வேண்டாம். சொத்துப் பிரச்சினை ஏற்படலாம். 30.4.2024 வரை குரு 12 ஆம் வீட்டில் இருப்பதால் சின்ன சின்ன செலவுகள் அதிகமாகிக் கொண்டேபோகும். ஆக்கபூர்வமான பணிகளுக்காக வெளியிலும் கொஞ்சம் கடன் வாங்க வேண்டியிருக்கும். புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள். பூர்வீக சொத்தில் பாகப்பிரிவினை நல்லவிதத்தில் முடியும். சிலருக்கு வெளிநாட்டுப் பயணம் அமையும்.

1.5.2024 முதல் வருடம் முடியும் வரை உங்கள் இராசிக்குள்ளேயே குரு அமரப் போகிறார். எனவே உடல் நலத்தில் அதிக கவனம் செலுத்துங்கள். யாரையும் நம்பி பெரிய முடிவுகள் எடுக்காதீர்கள். எதற்கெடுத்தாலும் கோபப்படுவதெல்லாம் இனி கூடாது. இரத்த அழுத்தம் அதிகரிக்கக்கூடும். உணவில் உப்பு, காரத்தை குறைத்துக் கொள்ளுங்கள். உங்கள் கோபத்தை பிள்ளைகளிடம் காட்ட வேண்டாம். உணர்ச்சி வசப்படாமல் எந்த முடிவும் எடுப்பது நல்லது. விருந்தினர், உறவினர் வருகை அதிகரிக்கும். இந்த ஆண்டு முழுவதும் ராகு பகவான் உங்கள் இராசிக்கு 11 ஆம் வீட்டில் நிற்பதால் பழைய சிக்கல்களை புதிய கோணத்தில் அணுகி வெற்றி காண்பீர்கள். கடனாக கொடுத்த பணம் கைக்கு வரும். சகோதர சகோதரிகள் பாசமாக நடந்து கொள்வார்கள். வெளி வட்டாரத்தில் செல்வாக்குக் கூடும்.

கேது பகவான் உங்கள் இராசிக்கு 5 ஆம் வீட்டில் இந்த ஆண்டு முழுக்க தொடர்வதால் பிள்ளைகளின் வருங்காலம் குறித்த கவலைகள் வந்து நீங்கும். அவர்களின் உயர்கல்விக்காக அதிகம் செலவு செய்வீர்கள். தாய்மாமன் வகையில் மனஸ்தாபங்கள் வந்து நீங்கும். எண்ணெயில் வறுத்த பொரித்த உணவுகளை தவிர்ப்பது நல்லது. நீண்ட நாட்களாக நிலுவையில் இருக்கும் நேர்த்திக் கடனை குடும்பத்துடன் சென்று முடிப்பீர்கள்.

இந்த ஆண்டு முழுவதும் சனிபகவான் உங்கள் இராசிக்கு 10 ஆம் வீட்டில் தொடர்வதால் உங்களின் திறமைகள் வெளிப்படும். பணபலம் கூடும். பொது விழாக்கள், கல் யாண, கிரஹப்பிரவேச சுப நிகழ்ச்சி களை முன்னின்று நடத்துவீர்கள். வெளிவட்டாரத்தில் புகழ், கௌரவம் வளரும். வெளிநாட்டிலிருக்கும் உறவினர், நண்பர்களால் திடீர் திருப்பங்கள் ஏற்படும். நட்பு வட்டம் விரியும்.

வியாபாரிகளே! இந்த வருடத்தின் முற்பகுதி அமோகமாக இருக்கும். புது முதலீடு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். புதுக்கிளைகள் தொடங்குவீர்கள். பற்று வரவும் உயரும். வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். கூட்டுத் தொழிலில் பங்குதாரர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்பர்.

உத்தியோகஸ்தர்களே! இந்த வருடத்தின் தொடக்கத்தில் இருந்து உங்கள் கை ஓங்கும். பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களில் சம்பள உயர்வு, பதவி உயர்வு எதிர்பார்க்கலாம். சிலருக்கு புது வேலை அமையும் உயரதிகாரிகள் மனம் விட்டுப்பேசுவார்கள். இந்த ஆண்டு எதிர்பாராத திருப்பங்களையும், சமூகத்தில் பெரிய அந்தஸ்தையும் அமைத்துத்தருவதாக இருக்கும்.

**பரிகாரம்:** சுப்ரமணியரை சென்று வணங்குங்கள். நோயுற்றிருக்கும் ஏதேனும் ஒரு நோயாளிக்கு மருந்து மாத்திரை வாங்கிக் கொடுங்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# டெங்கு பரவும் இடங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுப்பு



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் டெங்கு நோய்பரவலைத் தடுக்க துப்புரவற்ற இடங்களுக்கு சிவப்பு அறிவுறுத்தல் வழங்கப்பட்டு வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் கரைதுறைப்பற்று பிரதேச சபை யினருடன், இராணுவம், பொலிஸார் இணைந்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கையினை நேற்றுக் காலை முன்னெடுத்தனர்.

மாவட்டத்தில் டெங்கு நோய் சடுதியாக அதிகரித்தி ருப்பதனால் நீர் தேங்கி நுளம்புக் குடம்பிகள் பரவக் கூடிய சிறிய பாத்திரங்கள், பிளாஸ்டிக் பொருட்கள், ஏனைய நீர் தேங்கி நிற்க கூடிய பொருட்களை அகற்றுமாறும் டெங்கு அபாய நிலையினை கருத்திற்கொண்டு சுகாதார திணைக்களத்தின் அறிவுறுத்தல்கள் மீறப்படும் பட்சத்தில் தங்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப் பட்டு கடுமையான தண்டனைகள் வழங்கப்படும் எனவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-299)

# கிளி.மாவட்டத்தில் நிரந்தர வீடுகளின்றி 4,603 குடும்பங்கள்



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் 4,603 குடும்பங்கள் கடந்த பல ஆண்டுகளாக நிரந்தர வீடுகளின்றி தற்காலிக வீடுகளில் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றன.

யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மாவட்டத்தில் மீள்குடியேறி வாழ்ந்து வரும் அதிகளவான குடும்பங்கள் பன்னிரெண்டு வருடங்களுக்கு மேலாக தற் காலிக வீடுகளில் பெரும் கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றன.

அதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் 33,280 குடும்பங்களுக்கான வீட்டு தேவைகள் காணப்பட்ட நிலையில் 28,677 குடும் பங்களுக்கான வீடுகள் இதுவரை நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-315)

# 39 டெங்கு நோயாளர்கள் வவுனியாவில் அடையாளம்

(குருமன்காடு)

வவுனியா பொது மருத்துவ மனையில் 39 டெங்கு நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருவதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக டெங்கு தொற்று ஏற்பட்டு வருகின்றது.

அதனடிப்படையில் வவுனியா மருத்துவமனையில் 39 பேர் டெங்கு நோயாளர்களாக இனங் காணப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

எனினும் குறித்த 39 பேரும் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு உள்ளிட்ட பிற மாவட்டங்களுக்கு சென்று வந்த நிலையிலேயே டெங்கு தொற்றாளர்களாக இனங்காணப்பட்டு ள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் டெங்கு தொற்று தாக்கம் பெரியளவில் ஏற்படவில்லை.

எனினும், பொதுமக்கள் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை அழித்து டெங்கு தொற்றில் இருந்து தம்மையும் சமூகத்தையும் காக்க முன்னெச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் எனவும் சுகாதார பிரிவினர் தெரிவித்தனர்.(நி-5-6-250)

## ஜனாதிபதி வருகையினை முன்னிட்டு

# வடக்கு-கிழக்கு புகையிரதக் கடவை காப்பாளர்கள் பணிப்புறக்கணிப்பு

(நெளுக்குளம்)


ஜனாதிபதி வருகையினை முன்னிட்டு வடக்கு-கிழக்கு புகையிரதக் கடவை காப்பாளர்கள் 48 மணிநேர பணிப்புறக் கணிப்பினை முன்னெடுக்கவுள்ளதாக வடக்கு-கிழக்கு புகையிரதக் கடவை காப்பாளர் சங்க தலைவர் றொகான் ராஜ்குமார் தெரிவித்தார்.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

ஜனாதிபதி வருகையினை முன்னிட்டு வடக்கு-கிழக்கில் உள்ள புகையிரத கடவை காப்பாளர் சங்கத்தினர் இன்று தொடக்கம் நாளை அதிகாலை 6 மணிவரை பணிப் புறக் கணிப்பில் ஈடுபடவுள்ளனர். இதனால் மக்கள் அவதானமாக பயணங்களை மேற்கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் உள்ள 2064 புகையிரத கடவை ஊழியர்களை அடிமைகளாக நயவஞ்சகமாக நடத்தப்பட்டு வருவதை கண்டித்து இன்றும் நாளையும் வடமாகாணத்திற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க புகையிரதக் கடவை ஊழியர்களை இலங்கை பொலிஸிடம் இருந்து விடுவிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி 48 மணிநேர பணிப்புறக்கணிப்பில் ஈடுபட தீர்மானிக்கப் பட்டுள்ளது. (நி-5-6-299)



யாழ்.மாநகர சபையின் பவளவிழா கொண்டாடப்படுகின்ற நிலையில் ஆசி வேண்டி மதத்தலங்களில் இடம்பெற்றுவரும் விசேட பூஜை வழிபாடுகள். (படங்கள்:-சிவசாந்தன்)

# கொட்டப்படும் குப்பைகளால் அசுத்தமடையும் குளத்துநீர்

## தடுக்குமாறு கிளிநொச்சி மக்கள் கோரிக்கை



(அக்கராயன்)

கிளிநொச்சி குளத்திற்கு பெருமளவு நீர் வருகின்ற இரத்தினபுரம் பாலப் பகுதியில் தொடர்ச்சியாக குப்பைகள் கொட்டப்பட்டு வருகின்றன.

இதன் காரணமாக கிளிநொச்சி பொது மருத்துவ மனையின் கழிவு நீர் கனகாம்பிகைக் குளத்தின் வான் வெள்ளம் என்பவற்றுடன் இரத்தினபுரம் பாலப் பகுதியில் கொட்டப்பட்டுள்ள குப்பைகளும் கிளிநொச்சி குளத்தினை வந்தடைவதால் குளநீர் அசுத்தமடைவதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு நீர்நிலைகள் அசுத்தமடைவதால் பல வேறுபட்ட அசௌகரியங்களை மக்கள் எதிர்நோக்க நேரிடும். எனவே கழிவுக் குப்பைகளை கொட்டுபவர்கள் உரிய இடங்களில் கொட்டுவதால் இவ்வாறான செயற் பாடுகளில் ஈடுபடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (நி-5-6-350)

# நித்தகைக்குள காணிகளை விடுவித்து விவசாய நடவடிக்கைக்கு உதவுங்கள்

## கிராம மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு கரை துறைபற்று நித்தகைக்குளக் காணிகளை விடுவித்து விவசாய நடவடிக்கைகளுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நித்தகைக்குளப் பகுதியில் 600 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பு காணப்படுகின்றது. பெருமளவு காணிகள் வன வளத் திணைக்களத்தின் பிடியில் உள்ளன. குறித்த காணியினை விடுவிக்கும் படியே கோரிக்கைகள் விடுக்கப்பட்டன.

குறிப்பாக வயல் நிலமற்ற தண்ணிமுறிப்பு ஆறுமுகத்தான் குளத்தில் வாழ்கின்ற 110 இற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு நித்தகை குளத்தின் கீழ் வயல் நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் உள்ளன.

இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-5-6-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

## பாகம் - 2

காவியத் தொடர் 369





'இம்மாதிரி மிருகம் ஒன்றுதானா காட்டுப் பாதையில் அவ்வளவு பீதியை உண்டு பண்ணிவிட்டது?' என்று எண்ணி எண்ணி ஆச்சரியப்பட்டான்.

"இந்த இராஜபாட்டை எங்கிருந்து எங்கே போகிறது? நாம் எங்கே வந்திருக்கிறோம்? எங்கே போகிறோம்?" என்று கேட்டான்.

"அனுராதபுரத்திலிருந்து சிம்மகிரிக்குப் போகும் இராஜபாட்டையில் வந்து சேர்ந்திருக்கிறோம். தம்பள்ளை இன்னும் அரைக்காத தூரம் இருக்கிறது. இராத்திரி அங்கே போய்ச் சேர்ந்து விடலாம்" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"இராஜபாட்டை வழியாகச் சுகமாய் வந்திருக்கலாமே? எதற்காகக் காட்டு வழியாக வந்தோம்?"

"இராஜபாட்டையில் நாம் நெடுகிலும் வந்திருந்தால் நூறு இடத்தில் நம்மை நிறுத்திச் சோதனை செய்திருப்பார்கள். அநுராதபுரத்தில் அடியோடு நிறுத்திப் போட்டிருப்பார்கள். நாம் யாரைத் தேடி வந்திருக்கிறோமோ அவர் சிம்மகிரிக்குப் பக்கம் சென்றிருப்பதாக அறிந்தேன். அதனால்தான் குறுக்குவழியில் வந்தேன். இன்னமும் அவரை நாம் கண்டுபிடிக்கத்தான் போகிறோமோ, இல்லையோ? வேறு எங்கேயாவது போகாதிருக்க வேண்டும்!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

இராஜபாட்டையின் இரு பக்கத்திலும் ஏராளமான வீடுகளும், கிராமங்களும், கடை வீதிகளும், கொல்லர், தச்சர் பட்டறைகளும் இருந்தன. அவற்றில் வசித்தவர்களும் தொழில் செய்தவர்களும் பெரும்பாலும் சிங்களவர்களாகத் தோன்றினார்கள். இராஜபாட்டையில் தமிழ் நாட்டுப் போர் வீரர்கள் குறுக்கும் நெடுக்கும் போய்க் கொண்டிருந்தார்கள். ஆனால் இரு புறமும் வசித்த சிங்களவர்கள் எவ்வித தடையுமின்றி நிர்ப்பயமாய்த் தங்கள் தொழில்களைச் செய்து கொண்டிருந்தார்கள்.

"இந்தப் பகுதியெல்லாம் இப்போது யாருடைய வசத்தில் இருக்கிறது?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"சோழ சைன்யம் தம்பள்ளை வரையில் கைப்பற்றியிருக்கிறது. அப்பால் சிம்மகிரிக் குன்றும், கோட்டையும் மகிந்தன் வசம் இருக்கின்றன."

"இந்தப் பக்கங்களில் வசிக்கும் ஜனங்கள்?"

"பெரும்பாலும் சிங்களத்தார்கள். 'பொன்னியின் செல்வர்' இங்கே வந்தபிறகு யுத்தத்தின் போக்கே மாறிவிட்டது. சோழ வீரர்களுக்கும் மகிந்தனுடைய வீரர்களுக்குத்தான் சண்டை. அதாவது போர்க்களத்தில் எதிர்ப்படும் போது. மற்றப்படி குடிகள் நிர்ப்பயமாய் வாழலாம். புத்த குருமார்களுக்கு ஒரே கொண்டாட்டாம். அநுராதபுரத்தில் இடிந்துபோன புத்த விஹாரங்களையெல்லாம் நம் இளவரசர் திரும்பப் புதுப்பித்துக் கட்டும்படி கட்டளையிட்டிருக்கிறாராம்! கேட்டாயா கதையை? பௌத்த குருக்கள் ஏன் குதூகலமடைய மாட்டார்கள்? இளவரசரை நான் சந்திக்கும்போது, 'நீங்கள் செய்யும் காரியம் எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை!' என்று சொல்லிவிடப் போகிறேன்!"

"கட்டாயம் சொல்லிவிடும் உமக்குப் பிடிக்காத காரியத்தைச் செய்வதற்கு இந்த இளவரசர் யார்? அவருக்கு என்ன கொம்பு முளைத்திருக்கிறதா?" என்றான் வல்லவரையன்.

"அவருக்குக் கொம்பு முளைத்திருக்கவில்லை. தம்பி! அது உண்மையே! ஆனாலும் அவரிடம் ஏதோ ஒரு சக்தி இருக்கிறது. அவருக்குப் பின்னால் யார் என்ன குறை சொன்னாலும் எதிரில் அவரைப் பார்த்ததும் மயங்கிப்போய் நின்று விடுகிறார்கள். இளவரசரை எதிர்த்துப் பேசும் சக்தி யாருக்கும் இருப்பதில்லை.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## விலை மதிப்புள்ள பொருள்

(நேற்றைய தொடர்ச்சி)

உடனே அவரை அமரச் சொன்ன பேகம், "தயவு செய்து நான் அன்புடன் அளிக்கும் இந்தப் பழச்சாறை அருந்துங்கள்" என்று ஒரு கோப்பையை நீட்டிய பின், "இதுதான் நான் உங்களுக்கு அளிக்கப் போகும் கடைசி பானம்!" என்று விம்மியழ, அக்பரும் சற்றே மனமிளகி, அந்தப் பழச்சாறைக் குடித்தார்.



குடித்த பிறகு பேகத்தை நோக்கி, "உனக்கு மிகவும் பிடித்தமான பொருள்கள் எதுவானாலும் நீ இங்கிருந்து எடுத்துச் செல்ல உனக்கு ஏற்கெனவே அனுமதி அளித்துவிட்டேன். நான் வருகிறேன்" என்று விறைப்புடன் அக்பர் கூற, பேகத்தின் இதழ்களில் ஒரு விஷமப் புன்னகை அரும்பியது. பிறகு, எழுந்து இருந்து செல்ல முற்பட்ட அக்பருக்கு திடீரென உடலை என்னவோ செய்ய, "எனக்கு ஒரே தூக்கமாக வருகிறது" என்று தள்ளாடினார்.

உடனே விரைந்து சென்று அவரைத் தாங்கிப் பிடித்த பேகம், "ஐயோ! ஏன் இப்படித் தடுமாறுகிறீர்கள்? சற்று நேரம் உட்கார்ந்து விட்டுச் செல்லுங்கள்" என்று அவரைக் கையைப் பிடித்து அழைத்து வந்து படுக்கையில் உட்காரச் செய்தாள். அடுத்தகணம் தன்னை அறியாமல் படுக்கையில் சாய்ந்த அக்பர், அப்படியே தூங்கி விட்டார்.

தான் பழச்சாறில் கலந்த மருந்து வேலை செய்வதைக் கண்டு மகிழ்ந்த பேகம், உடனே தன் கைகளைத் தட்டி சில காவலர்களை அழைத்து, அக்பரை படுக்கையோடு சேர்த்து எடுத்துச் சென்று பல்லக்கில் வைக்கும்படி உத்தரவிட்டாள். அப்படியே அவர்கள் செய்ய, உடனே பேகம் தங்கள் இருவரது உடைமைகளையும் மற்றொரு பல்லக்கில் ஏற்றித் தானும் ஏறிக்கொள்ள, உடனே இரண்டு பல்லக்குகளும் ஆட்களால் சுமக்கப்பட்டு, பேகத்தின் பிறந்த வீட்டை அடைந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் வீட்டையடைந்ததும், பேகம் அங்கிருந்த பணியாட்களுக்கு இட்ட கட்டளையின் படி, அவர்கள் அக்பரைப் படுக்கையோடு தூக்கிக் கொண்டு வந்து படுக்கையறையில் கிடத்தினார்கள்.

"ஐயோ! ஏன் இப்படி சக்கரவர்த்தியை தூக்கி வருகின்றனர் அவருக்கு உடல் சரியில்லையா" என்று பேகத்தின் பெற்றோர் பதறிப்போக, "ஒன்றுமில்லை. கடந்த சில நாள்களாக இருந்த மிக அதிகமான வேலையினால், பல்லக்கில் வரும்போது தூங்கிக் கொண்டே வந்தார். உண்மையில் ஒரு நாள் ஓய்வு எடுக்கவே அவர் இங்கு வந்துள்ளார்" என்று பேகம் பதிலளித்தாள்.

ஒரு மணி நேரம் கழித்து கண்களைத் திறந்த அக்பர், பேகத்தை நோக்கி, "நான் எங்கிருக்கிறேன்" என்று கேட்டார். "நீங்கள் என் பிறந்த வீட்டில் தான் இருக்கிறீர்கள்" என்று பேகம் புன்னகையுடன் கூற, அக்பருக்கு சுரீர் என்று கோபம் தலைக்கேறியது.

"நான் தூங்கிக் கொண்டிருக்கும்போது என்னை இங்கு தூக்கி வர உனக்கு யார் அனுமதி கொடுத்தது" என்று அவர் சீறினார்.

"நீங்கள் தான் பிரபு!" என்று கூற அவர் சீறினார்.

"என்ன உளறுகிறாய் நான் எப்போது அனுமதி தந்தேன்?" என்று அக்பர் கேட்க, அதற்கு பேகம், "உனக்குப் பிடித்த பொருள் எதுவானாலும் நீ இங்கிருந்து அதை எடுத்துச் செல்லலாம் என்று அனுமதி அளித்ததே நீங்கள் தான்! எனக்கு உலகிலேயே மிகவும் பிடித்த பொருள் நீங்கள்தான்! அதனால் உங்களை என்னுடன் எடுத்து வந்ததில் என்ன தவறு?" என்று சாமர்த்தியமாக மடக்கினாள்.

"ஓ!" என்ற அக்பர் திடீரென வாய்விட்டு சிரித்தார். "நீ மிகவும் சாமர்த்தியமாக செயற்பட்டு இருக்கிறாய். சரி வா! நாம் நம் அரண்மனைக்குப் போவோம்!" என்ற அக்பர், தொடர்ந்து, "அதிருக்கட்டும்! உனக்கு இந்த அபாரமான யோசனையை சொல்லிக் கொடுத்தது யார்?" என்று கேட்டார்.

அதற்கு பேகம் "நீங்கள்தான் மிகவும் புத்திசாலியாயிற்றே! கண்டு பிடியுங்களேன்!" என்றாள் .

"அது நிச்சயம் பீர்பா லாகத் தானிருக்கும்" என்றார் அக்பர்.

(முற்றும்)

உண்மையை உறுதியாகக் கடைப்பிடிப்பதில் இருந்துதான் வலிமை எல்லாம் கிடைக்கிறது.
– காந்திஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பொதுமக்களைப் பாதுகாப்பது பொலிஸாரின் தார்மீகப் பொறுப்பு

போதை ஒழிப்புத் தொடர்பில் நாடு பூராகவும் அதிதீவிர தேடுதல் வேட்டை நடந்து வருகிறது.

இதில் நாள்தோறும் ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

சிறைச்சாலைகள் நிரம்பி வழிந்தாலும் கைது நடவடிக்கை தொடருமென பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் கூறியிருப்பது மகிழ்ச்சி தருகிறது.

இதேவேளை போதைவஸ்துடன் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்கின்ற நடவடிக்கை வட மாகாணத்திலும் தீவிரமாக்கப்பட்டுள்ளது.

வட மாகாணத்தில் மிகவிரைவில் போதைவஸ்துப் பாவனை ஒழிக்கப்படும் என பொலிஸ் அதிகாரிகள் உறுதிபடக் கூறியிருப்பது ஆறுதலைத் தருகின்றது.

இதேவேளை போதைவஸ்துடன் தொடர்புடையோரில் கைது செய்யப்படுபவர்களில் கணிசமானவர்கள் போதைப் பாவனையாளர்கள் என்ற தகவலும் உண்டு.

அதாவது நாட்டில் போதை வியாபாரத்தில் மிகப்பெரும் திமிங்கிலங்கள் உள்ளன. ஆனால் இப்போது கைது செய்யப்படுபவர்கள் போதைப்பாவனையாளர்களும் சிறு வியாபாரிகளும் என்பதாக அந்தத் தகவல் உள்ளது.

பரவாயில்லை. நாட்டில் ஒட்டுமொத்தமாகப் போதைவஸ்தை ஒழிப்பதாக இருந்தால், இவ்வாறான கைதுகள் அவசியமாகின்றன.

அதே சமயம் சர்வதேச அளவில் போதை வியாபாரிகளுடன் தொடர்புடைய முதலைகள் உள்ளனர். அவர்களைக் கைது செய்வது மிகவும் அவசியமாகின்றது.

இங்குதான் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் கூறிய ஒரு விடயத்தின் பால் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

அதாவது போதைவஸ்துடன் தொடர்புடைய முக்கியமான குற்றவாளிகளை பொலிஸ் அதிகாரிகள் காப்பாற்றுகின்றனர்.

தவிர, இத்தகையவர்களுக்கு மதத் தலைவர்களுடனும் நெருங்கிய தொடர்பு உண்டு என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் கூறியது மட்டுமல்ல. மாறாக போதை வியாபாரிகளுக்கும் பொலிஸ் உயர்மட்டத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டென்பதை புலனாய்வுத் துறையின் அறிக்கையும் சுட்டி நிற்கிறது.

எனவே போதைவஸ்துடன் தொடர்புடைய முதலைகளைக் கைது செய்வதாக இருந்தால் அவர்களுடன் தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகளை முதலில் கைது செய்ய வேண்டும்.

இதைச் செய்யாமல், போதைவஸ்து வியாபாரத்தை அடியோடு ஒழிக்க முடியாது.

இதற்கும் மேலாக போதை ஒழிப்பில் பொது மக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகிறது.

எனவே பொலிஸார் மேற்கொண்டுள்ள போதை ஒழிப்பு நடவடிக்கைக்கு பொதுமக்களும் தகவல்களை வழங்கி உதவ வேண்டும்.

# முதல் காலாண்டு இறுதிக்குள் மக்கள் மீதான சுமை குறைக்கப்படும்

## வர்த்தக அமைச்சர் நளின் பெர்ணான்டோ

(கொழும்பு)

2024ஆம் ஆண்டை சாதகமான பொருளாதார வேகத்துடன் ஆரம்பிப்பதன் காரணமாக இந்த வருடத்தின் முதல் காலாண்டு இறுதிக்குள் மக்கள் மீதான சுமை 75% குறைக்கப்படும் என வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்ணான்டோ தெரிவித்தார்.

நுகர்வோர் அதிகார சபைக்கான வேலைத்திட்டம் இவ்வருடத்திற்குள் ஆரம்பிக்கப்படும் என்றும் அதனால் நுகர்வோர் உரிமைகள் மேலும் பாதுகாக்கப்படும் எனவும் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் நளின் பெர்ணான்டோ இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் நளின் பெர்ணான்டோ,

இந்த ஆண்டின் முதல் காலாண்டு இறுதிக்குள் மக்கள் மீதான சுமை 75% குறைக்கப்படும் என்பதைக் குறிப்பிட வேண்டும். தற்போதுள்ள வரிக் கொள்கையால், எதிர்காலத்தில் பல சலுகைகள் கிடைக்கும் என உறுதி செய்யமுடியும்.

வரி விதிப்பு தவறு என்று யாராவது கூறினால், அவர் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு எதிரானவர் என்பதைக் குறிப்பிட வேண்டும். நாட்டிற்குக் கிடைக்கும் வரி வருமானத்தில் இருந்து நாட்டின் எதிர்காலத்துக்காக முதலீடுகள் செய்யப்படுமானால், அதற்குத் துணை நிற்க வேண்டியது ஒட்டுமொத்த மக்களின் பொறுப்பாகும்.

நாட்டின் வருமானம் குறைவு வரி அதிகம் என்று ஏராளமானோர் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர். மொத்தமாக எடுத்துக் கொண்டால், எமது நாட்டில் 12% என்ற அளவிலேயே வரி வசூலிக்கப்படுகின்றது. ஆனால் நாட்டை விட்டு வெளியேறி தொழிலுக்காகச் செல்லும் நாடுகளின் வரி சதவீதம் 38% முதல் 43% அளவில் உள்ளது. அந்நாடுகளில் இத்தகைய வரிவிதிப்பு முறைகள் இருப்பதனால் அந்நாடுகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

வெங்காய ஏற்றுமதியை இந்தியா நிறுத்தியதால், நாட்டிற்கு அதிக சுமை ஏற்பட்டுள்ளது. ஆனால் அடுத்த இரண்டு வாரங்களில் வெங்காய ஏற்றுமதியை இந்தியா எளிதாக்கி பிறகு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

எனினும், வற் மற்றும் வரி அதிகரிப்பு தொடர்பாக எவ்வித ஆய்வும் மேற்கொள்ளாமல், ஊடகங்கள் மூலமாகவும், பல்வேறு வழிமுறைகள் மூலமாகவும் முறையற்ற வகையில் விளம்பரம் செய்வதே எமக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு என நம்புகின்றோம். இந்நிலையில் இடைத்தரகர்களும், நிறுவனங்களும் தமது விருப்பத்துக்கு விலையை உயர்த்துவதால் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. (ம-7)

# நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு காரணமானவர்களை கட்சியில் இணைக்கோம்

## ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

பொருளாதார வீழ்ச்சிக்கு காரணமானவர்கள் தங்கள் கட்சியுடன் இணைந்துகொள்ள மாட்டார்கள் என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அண்மையில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துகொண்டமை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான ஹர்ஷ டி சில்வா மற்றும் எரான் விக்ரமரத்ன ஆகியோர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையிலே இந்த விடயத்தை தெரிவித்துள்ளனர்.

இதன்படி, பொருளாதார வீழ்ச்சிக்கு காரணமானவர்களுடன் ஒன்றிணைவதற்கு தயாரில்லை எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தமது கட்சியுடன் இணைந்துகொள்ள விரும்புபவர்கள் தூய்மையானவர்களாகவும் எமது பொருளாதாரக் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளவதற்கு தயாராகவும் இருக்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளனர். (ம-7)

### திருமலை எண்ணெய் குதங்கள்

# 50 வருட குத்தகைக்கு வழங்க தீர்மானம்

(திருகோணமலை)

திருகோணமலையில் உள்ள 99 எண்ணெய் குதங்களில் 61 எண்ணெய் குதங்களை திருகோணமலை பெற்றோலிய முனைய தனியார் நிறுவனத்துக்கு 50 வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

03.01.2022அமைச்சரவைக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டவாறு குறித்த எண்ணெய் குதங்களை வழங்க கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

திருகோணமலை சீனக்குடா துறைமுகத்தில் உள்ள 99 எண்ணெய்த் குதங்களை மேற்புறதாங்கி திடல் கொண்டுள்ளது.

அவற்றில் 61 குதங்களை திருகோணமலை பெற்றோலிய முனைய தனியார் கம்பனிக்கு 50 வருடகாலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கு அமைச்சரவையில் வழங்கப்பட்ட அங்கீகாரத்துக்கு எதிராக கடுமையான எதிர்ப்புகள் கடந்தகாலத்தில் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், தற்போது குறித்த தீர்மானத்தை அமுல்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டு அவற்றை அபிவிருத்தி செய்வதற்கான சாத்தியவளக் கற்கை உள்ளிட்ட அடிப்படை படிமுறைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த சாத்தியவளக் கற்கை மூலம் இக்கருத்திட்டம் 16 ஆண்டுகளில் 7 கட்டங்களாக அபிவிருத்தி செய்வதற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளதுடன், அதன் முதலாவது கட்டத்தின் கீழ் பொருளாதார ரீதியாகப் பயனுறு வாய்ந்த 9 குதங்களை மறுசீரமைப்புச் செய்வதற்கும், கிட்டத்தட்ட 1.75 கிலோ மீற்றர் தூர வீதியைப் புனரமைப்பதற்கும், ஏற்புடைய ஏனைய வசதிகளை நிர்மாணிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நிர்மாணித்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் ஒப்படைத்தல் (BOT) எனும்வணிக மாதிரியைப் பின்பற்றுவதற்க முன்மொழியப்பட்டுள்ளது.

அதற்கமைய, முதலாவது கட்டத்தின் கீழ் மேற்கொள்வதற்கு உத்தேச அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பொருத்தமான முதலீட்டாளரைத் தெரிவு செய்வதற்காக, குறித்த பெறுகைச் செயன்முறையைக் கடைப்பிடிப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.(ம-7)

### உயர்தர பரீட்சார்த்திகளுக்கு

# பரீட்சை ஆணையாளரின் விசேடமான அறிவிப்பு

க.பொ.த உயர்தர பரீட்சை அட்டவணையில் சிறிய மாற்றம் ஏற்பட்டுள்ளமை தொடர்பில் அவதானம் செலுத்துமாறு பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர பரீட்சார்த்திகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த முறை ஒரு புதிய பாடம் சேர்க்கப்பட்டுள்ளது. அது கொரிய மொழி. அந்த பாடத்தை சேர்க்க, அட்டவணையில் சிறிய மாற்றங்களைச் செய்ய வேண்டியிருந்தது.

எனவே, முந்தைய அட்டவணையைப் பயன்படுத்த வேண்டாம்என்று அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். ஏனெனில்சிலவலைத்தளங்கள் இந்த அட்டவணையைக் காட்டக்கூடும்.

பரீட்சார்த்திகளின் வசதிக்காக இந்த அட்டவணையை அனுமதிப்பத்திரத்தில் காட்டியுள்ளோம். அதனால் வேறு எங்கும் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை என தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அனர்த்தம் ஏற்படக்கூடிய பகுதிகளில்அமைந்துள்ள க.பொ.த உயர்தர பரீட்சை நிலையங்களுக்கு பதிலாக மாற்று பாடசாலைகளை தயார்படுத்தும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக அவர் கூறியுள்ளார்.

மேலும் அனுராதபுரம், கெக்கிராவ, பொலன்னறுவை, பசறை, அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் ஹசலக்க ஆகிய பிரதேசங்களில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம அலுவலர் பிரிவுகள் தோறும் நடைமுறைப்படுத்த இருக்கும் மக்கள் சபைகள் (ஜனசபா)

03

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்திற்கு 1947ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை 40இற்கு மேற்பட்ட திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

**1938 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்க கிராமிய பிரஜைகள் தொடர்பான கட்டளைச் சட்டம்**

இச் சட்டத்தின் மூலம் ஆண் பெண் பேத மின்றி சர்வஜன வாக்குரிமை யாவருக்கும் வழங்கப்பட்டது. தேர்தல் வேட்பாளராகப் போட்டியிடுவதாயின், அவர் 200 ரூபாவுக்குக் குறையாத பெறுமதியுடைய சொத்துக்களுக்கு உரித்தானவராய் இருத்தல் வேண்டும். தமது வதிவினை உறுதிப்படுத்தும் தகைமையின்மை காரணமாக தோட்டத் தொழிலாளர்களுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்படவில்லை.

**1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க நகர சபைகள் கட்டளைச் சட்டம்**

இக் கட்டளைச் சட்டம் பிரகடனப் படுத்துவதற்கு முன்னர் ஏற்கெனவே இருந்த நகர மாவட்ட சபைகள் (UDC) எனப்படும் நிறுவனத்தின் கீழ் இயங்கிய 27 கிராமங்கள் நகர சபைகளாக மாற்றப்பட்டன.

அன்றைய காலகட்டத்தில் இந்த உள்ளூராட்சி மன்றங்களை உள்ளூர் ஆட்சிச் சபைகள் எனப் பெயரிட்டு அழைத்திருந்தனர். பெயர்ப் பலகைகளிலும் இந்தப் பெயரே பொறிக்கப்பட்டிருந்தன. இந்தச் சபைகளின் தவிசாளர் பதவி உத்தியோகபூர்வமாக அரசாங்க அதிபருக்கு உரியதாக இருந்த காரணத்தினால், அதற்குப் பதிலாக தேர்தல் மூலம் ஒரு தவிசாளரைத் தேர்ந்தெடுக்கும் வகையில் கட்டளைச் சட்டங்களில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. உறுப்பினர்களின் எண்ணிக்கை 6-12 க்கும் இடைப்பட்ட எண்ணிக்கைக்கு வரையறுக்கப்பட்டன. அன்றைய காலகட்டத்தில் 21 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும், 100 ரூபாவிற்குக் குறையாத சொத்துக்களுக்கு உரித்துடையவர்களுக்கும் மாத்திரமே வாக்களிக்கும் உரிமை இருந்துள்ளது. 1939 - 1977 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் நகர சபைகள் கட்டளைச் சட்டத்திற்கான 44 திருத்தச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

**1946 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்**

1946ஆம் ஆண்டில் பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தை அரச சபை நிறைவேற்றியமை இன்னுமொரு முக்கிய நிகழ்வாயமைந்தது. நகர் சார் இயல்புகளைக் கொண்ட சிறு நகரங்கள் பட்டின சபைகளுக்கான கட்டளைச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. இந்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதன் பின்னர், சுகாதாரம் பேணல் சபைகளின் கீழ் இயங்கிய 24 கிராமங்கள் பட்டின சபைகளாக மாற்றப்பட்டன.

1948 முதல் 1980 வரை நிறைவேற்றப்பட்ட சட்டங்களின்படி மேம்படுத்தப்பட்டன. 1980 ஆம் ஆண்டில் அபிவிருத்தி சபைகளுக்கு பட்டின சபைகளைக் கையளிக்கும் போது 83 பட்டிண சபைகள் நடைமுறையில் காணப்பட்டன.

**1945 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சேவைகள் கட்டளைச சட்டம்**

கிராமிய செயற்குழுக்களில் கடமையாற்றிய ஊழியர்கள் உள்ளூராட்சிச் சேவைகள் ஆணைக்குழுவிற்கு உள்ளீர்க்கப்பட்டனர். 1945இல் நிறுவப்பட்ட உள்ளூராட்சிச் சேவைகள் திணைக்களமானது சிரேஷ்ட பதவிகளுக்கு அலுவலர்களை ஆட்சேர்த்து நியமித்தல், தெரிவு செய்யப்பட்ட சபைகளின் கொள்கைசார் தீர்மானங்களை சீராக அமுலாக்கல் மற்றும் பல்வேறு சட்டங்களின்படி தொழிற்பாடுகளை நிறைவேற்றல் ஆகியவற்றை நிறைவேற்றுவதற்குத் துணைநின்றது.

**1946 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச் சட்டம்**

மாநகர சபைகள், நகர சபைகள், பட்டிண சபைகள், கிராம சபைகள் ஆகிய உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான தேர்தல் முறைகள் தேர்தல் ஆணையாளரின் அதிகாரத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. வாக்காளர் இடாப்புக்கள் தயாரித்தல், வாக்காளர்களினதும், வேட்பாளர்களினதும் தகைமைகள், தேர்தல்களுக்கான செலவுகள், தேர்தல்கள் நடாத்தப்பட வேண்டிய முறைகள் தொடர்பான மத்திய அரசாங்கத்தின் ஒழுங்குவிதிகள் யாவும் பொதுவாக உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் ஏற்புடையவாறு செயல்வலுவாக்கம் செய்யப்பட்டன.

1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற நிர்வாகப் பிரதேசங்கள்- கிராமிய செயற்குழுக்கள் யாவும் உள்ளூராட்சி மன்றத் திணைக்களத்தின் கீழ் கொண்டு வரப்பட்டதோடு, உள்ளூராட்சி மன்ற உதவி ஆணையாளர்களின் மேற்பார்வையின் கீழும் கொண்டு வரப்பட்டன.

1947 ஆம் ஆண்டில் கிராம சபைகளால் செயற்படுத்தப்பட்ட "மெய்வரி" இல்லாதொழிக் கப்பட்டதுடன், அதற்குப் பதிலாக அதற்குரிய நிதி மத்திய அரசாங் கத்தினால் கிராமிய செயற்குழுக்களுக்கு வழங்கப்பட்டது.

1948இல் இலங்கை சுதந்திரம் அடைந்த போது உள்ளூர் அதிகாரசபைகளாக மாநகர சபைகள், நகர சபைகள், பட்டின சபைகள் மற்றும் கிராம செயற்குழு சபைகள் ஆகியவை இருந்தன.

**1952ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க உள்ளூர் அதிகாரசபைகளின் அதிகாரங்களை விரிவுபடுத்துதல் சட்டம்**

இச் சட்டத்தின் பிரகாரம் மத்திய அரசிடமிருந்து சில அதிகாரங்களை உள்ளூர் அதிகார சபைகளுக்கு மாற்றியதுடன், நகர சபைகளுக்கும் புதிய அதிகாரங்கள் வழங்கப்பட்டன.

உள்ளூராட்சி மன்றங்களை பரந்தளவிலான அதிகாரங்களுடன் வினைப்பயன் கொண்டு தொழிற்படுத்துவதற்கான பல முக்கியமான சட்டங்கள் சுதந்தரத்திற்கு பின்னரான காலப்பகுதியில் நிறைவேற்றப்பட்டன. 1952ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க உள்ளூர் அதிகாரசபைகளின் அதிகாரங்களை விரிவுபடுத்துதல் சட்டம் நிறைவேற்றப்பட்டமை நான்கு வகையான உள்ளூராட்சி மன்றங்களுக்கும் கூடுதலாக அதிகாரங்களை வழங்கும் பிரதான உள்ளூராட்சி சீரமைப்பாகும். இது மத்திய அரசாங்கத்திலிருந்து உள்ளூராட்சி மன்றங்களை கட்டுப்படுத்தும் அமைச்சர்கள் பெற்றிருந்த அதிகாரங்களைக் குறைத்தது. இதற்கு முன்னர் குறிப்பிட்டவாறு உள்ளூராட்சி தொடர்பான நான்கு முக்கியமான கட்டளைச் சட்டங்களும் பல தடவை திருத்தியமைக்கப்பட்டன.

1948-1980 காலப் பகுதியில் மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் 40 தடவைகளும், நகர சபைக் கட்டளைச் சட்டம் 44 தடவைகளும், பட்டின சபைக் கட்டளைச் சட்டம் 23 தடவைகளும் மற்றும் கிராம செயற்குழு சபைகள் (கிராமச் சபைகள்) கட்டளைச் சட்டத்தில் 49 தடவைகளும் திருத்தங்கள் செய்யப்பட்டிருந்தன.

இவ்வுள்ளூர் ஜனநாயக நிறுவனங்கள் பயனளிக்கும் வகையில் தொழிற்படுவதற்கான அதிகாரங்கள் கூடுதலாக வழங்குவதே இத் திருத்தங்களின் நோக்கமாகவிருந்தன. 1971ஆம் ஆண்டின் 59ம் இலக்கச் சட்டம் உள்ளூராட்சி வருமானங்களை அறவிடும் அதிகாரத்தை ஊதியம் பெறும் அலுவலருக்கு வழங்கியது.

சபைகளின் வருடாந்த வரவு-செலவுத் திட்டங்களிற்கும் செலவின மதிப்பீடுகளுக்கும் சபைகள் அனுமதி கொடுக்காத சந்தர்ப்பங்களில் அனுமதி வழங்கும் அதிகாரத்தை சபைத் தலைவர்களுக்கு 1977 ஆம் ஆண்டின் 24ஆம் இலக்கச் சட்டம் வழங்கியது.

இலங்கையின் உள்ளூராட்சி மன்றங்களின் வரலாற்றில் காலம் சென்ற பிரதமர் SWRD பண்டாரநாயக்கா அவர்கள் உள்ளூராட்சி அமைச்சராக பணியாற்றிய காலத்திலேயே உள்ளூராட்சி மன்றங்கள் மறுமலர்ச்சி அடைந்தன. இது ஓர் வரலாற்று நிகழ்வாகும்.

பட்டின சபைகள் மற்றும் கிராம சபைகள் ஆகியவற்றின் செயலாற்றுகையை பரிசீலிப்பதற்காகவும் அவை நிறுவனங்களாக்குவதற்கான வரையறுப்புக்களைப் பிரேரிப்பதற்காகவும் 1978இல் அமைச்சரவை ஒரு குழுவை நியமித்தமை உள்ளூராட்சி மறுசீரமைப்பின் முக்கிய நிகழ்வொன்றாகும். திரு. ஜி. மொறகொடவின் தலைமையில் நியமிக்கப்பட்ட குழு, 83 பட்டின சபைகள் மற்றும் 549 கிராம சபைகள் ஆகியவற்றிற்குப் பதிலாக உப அரசாங்க பிரிவு அடிப்படையில் 269 கிராமிய சபைகளை நிறுவும் படி சிபாரிசு செய்ததெனினும் இம் முன்மொழிவு அமுல்படுத்தப்படவில்லை.

**1978இல் உருவாக்கப்பட்ட பிரதேச சபைகள்**

பிரதேச சபைகள் 1978இல் தாபிக்கப்பட்டது. இதன் உறுப்புரிமையானது கிராமோதய சபைத் தலைவர் மற்றும் பதவி வழிகாரணமாக உதவி அரசாங்க அதிபர், உதவி அரசாங்க பிரிவில் கடமையாற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் (உதாரணமாக கிராமசேவையாளர் போன்றோர்) இடம் பெறுவர். இச் சபையின் தலைவராக பதவி வழியற்ற யாராயினும் ஒருவர் (சபையால் தெரிவு செய்யப்படுபவர்) இடம் பெறுவார். இச் சபையின் செயலாளராக பதவி வழிகாரணமாக உதவி அரசாங்க அதிபர் இடம் பெறுவார்.

1979 தென்னகோன் ஆணைக்குழு, அப்போது மத்திய அரசால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள மாவட்ட அபிவிருத்தி சபைகளை (DDC) நிறுவப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தது. மாவட்ட அபிவிருத்திச் சபைகள் சட்டம் - 1980 இன் இல.35 பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது மற்றும் 24 மாவட்ட அபிவிருத்திச் சபைகள் உருவாக்கப்பட்டன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில்...

சந்தேகத்தில் அவரின் உடல் மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

அநுராதபுரம், பதவியா பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த நபர் சிறுநீரக நோய் காரணமாக வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் சிகிச்சை பலனின்றி நிமோனியா காய்ச்சலாக மாறி நேற்று முன்தினம் இரவு அவர் மரணமடைந்தார்.

அவருக்கு கோவிட் தொற்று ஏற்பட்டுள்ளதா? என்ற சந்தேகம் ஏற்பட்ட நிலையில், அவருடைய உடல் மாதிரிகள் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பதவியாவை சேர்ந்த 55 வயதான நபரே இவ்வாறு மரணமடைந்தவராவார். (ம-7,250)

## கட்டுப்படுத்து...

தினையும் வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அவை பற்றிய நடவடிக்கைகள்

தொடர்பாக ஜனாதிபதி செயலகத்தின் பிரதானி சாகல ரத்நாயக்க மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரிடையே இடம்பெற்ற கலந்துரையாடலின்போது மேற்குறித்த விடயங்கள் பிரஸ்தாபிக்கப்பட்டன.

சூம் காணொளி ஊடாக நேற்று புதன்கிழமை நடைபெற்ற இக்கலந்துரையாடலில், போதைப்பொருள் பாவனைக்கு எதிராக யாழ்.மாவட்டத்தில் பொலிஸார் மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் அணுகுமுறைகளும் அதிருப்தியையும் சந்தேகங்களையும் ஏற்படுத்துவதாக தெரிவித்துள்ள அமைச்சர், சில சந்தர்ப்பங்களில் போதைப்பொருள் வியாபாரிகள் தப்பித்துக் கொள்வதற்கான கால அவகாசத்தினை பொலிஸார் வழங்கிய தான சந்தேகம் மக்கள் மத்தியில் இருப்பதையும் சுட்டிக்காட்டினார். (ம-7,33)

## அரசியல் தீர்வை...

கொழும்பு ஊடகம் ஒன்றுக்குப் பொருளாதாரப் பிரச்சினை, தேசிய இனப் பிரச்சினை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஒருபுறத்தில் நாட்டின் பொருளாதாரத்தை நாம் கட்டியெழுப்ப வேண்டும். அதேவேளை, மறுபுறத்தில் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை நாம் காண வேண்டும். இந்த இரண்டு பிரதான விடயங்களும் நிறைவேற வடக்கு - கிழக்கு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் முழுமையான ஆதரவு மிகவும் அவசியமானது.

எனவே, இந்த இரண்டு கருமங்களையும் முன்னெடுக்கின்ற அரசுடன் சேர்ந்து பணியாற்ற தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வர வேண்டும்.

இன, மத, மொழி வேறுபாடின்றி அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒரே குடையின் கீழ் பயணித்தால்தான் பொருளாதாரத் தீர்வையும், அரசியல் தீர்வையும் நாம் விரைவில் வென்றெடுக்க முடியும் எனவும் தெரிவித்தார். (ம-7)

## தமிழர்களின்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வென்றெடுக்க வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதியின் வாக்குறுதிகளும் வடக்குக்கான உத்தேச விஜயமும் செயற்பாட்டளவில் அமையுமாயின் ஒத்துழைப்பை வழங்குவோம் என்றும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று வியாழக்கிழமை வடக்கிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள நிலையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். (ம-7)

## வருமானத்தை...

செய்ய தாம் தயாரில்லை எனவும் குறிப்பிட்டார்.

சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த கண்காட்சி நிலையத்தில் நேற்று இடம்பெற்ற "ஷில்ப அபிமானி 2023" எனும் கைவினைப் பொருட்கள் விருது வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

இந்த ஆண்டின் ... தேசிய ...

உற்பத்தியின் ஊடாக 12% வருமானம் பெறப்பட வேண்டும் எனவும் இதனை 15% இலக்குடன் நிறைவு செய்ய வேண்டியுள்ளதாகவும், மொத்த தேசிய உற்பத்தியில் 15% வருமானத்தைப் பெற முடிந்தால், பொருளாதார ரீதியாக முன்னேறும் பலம் உள்ளதெனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (ம-7)

## ரணிலின்...

கள் முன்னெடுக்கப்படவில்லை என்று தெரிவித்தும் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

குறித்த போராட்டத்தை தமிழ்த் தேசியக் கட்சிகள்,பொது அமைப்புக்கள், பல்கலை மாணவர்கள் இணைந்து முன்னெடுக்கவுள்ளனர்.

இந்த நிலையில், இன்று பிற்பகல் 2 மணியளவில் குறித்த போராட்டம் யாழ்ப்பாணம் கச்சேரிப் பகுதியில் இடம்பெறவுள்ளதாகவும் மக்களை ஒன்றுசேருமாறும் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளதாக தெரியவருகிறது. (ம-7)

## யாழ்...

இதற்கமைய இன்று 4ஆம் திகதி யாழ்ப்பாணம் வரும் ஜனாதிபதி மாலை 3 மணி முதல் 5.30 வரை மாவட்டச் செயலகத்தில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பங்குபற்றவுள்ளார். அன்று மாலை 7 மணி முதல் 9.30 வரை சிவில்சமூகப்பிரதிநிதிகளை அவர் சந்திக்கவுள்ளார்

தொடர்ந்து 5 ஆம் திகதி காலையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெறும் வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான அபி விருத்திக் குழுக் கூட்டத்திலும், மாலை 2 மணி தொடக்கம் 3 மணி வரையில் பூநகரிப் பிரதேச அபிவிருத்தி மற்றும் நகர மயமாக்கல் தொடர்பில் பூநகரிப் பிரதேச செயலகத்தில் இடம்பெறும் கலந்துரையாடலிலும் ஜனாதிபதி கலந்து கொள்ளவுள்ளார்.

6ஆம் திகதி காலை 9 மணி முதல் 10 மணி வரையில் யாழ். மாவட்ட செயலகத்தில் ...

பல்கலைக்கழக உபவேந்தர்கள் மற்றும் கிளிநொச்சி வளாகப் பீடாதிபதி உள்ளிட்ட விரிவுரையாளர்களுடனான சந்திப்பைத் தொடர்ந்து 10 மணிமுதல் 11.30 மணி வரையில் சர்வமதப் பிரதிநிதிகள், மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலையின் நலன்புரிச் சங்கத்தின் பிரதிநிதிகளை ஜனாதிபதி சந்திக்கின்றார்.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி தலைமையில் மாலை 3 மணி முதல் 5 மணி வரை யாழ்.மாவட்ட செயலகத்தில் நிபுணர்களுடனான சந்திப்பும், 7 ஆம் திகதி தந்தை செல்வா மண்டபத்தில் பனை தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடனான சந்திப்பும் இடம்பெறவுள்ளது. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

லக்கி 7 VIP
திகதி 2024.01.03
சீட்டிழுப்பு இலக்கம் 0174
S 9 0 4 2 6 6 S

தன நிதானய
திகதி - 2024.01.03
சீட்டிழுப்பு இலக்கம் - 1378
Z 12 22 77 78 Z
Double Chance 31349

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3590
சீட்டிழுப்பு திகதி 03.01.2024
P 32 45 62 73
P 08724

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.01.03
சீட்டிழுப்பு இலக்கம் 0657
கும்பம் 17 50 56 62 கும்பம்
08062 11

மஹஜன சம்பத
திகதி 2024/01/03
சீட்டிழுப்பு இலக்கம் 5348
S 1 6 5 3 7 2

மெகா பவர்
திகதி 03/01/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1696
A 20 19 22 47 57
45476

சுப்பர் பொல்... உத்தியோகபூர்வ முடிவுகள்
03.01.2024 வெற்றி வாரம் 056 வர்ணம் பசுமை
K 9 1 4 3 3 2
75123
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 25,498,123.20
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2322 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2024.01.03 தினம் புதன்கிழமை
09 38 57 58 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,924,948/-
70262

சனிதா
திகதி 2024.01.03 வெற்றி வாரம் 4483
30 61 62 66 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.68,852,184.80
30396

சீட்டிழுப்பு வாரம் 4034 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2024.01.03 தினம் புதன்கிழமை
25 26 32 59
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,405,971.20
778014

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
N 37 31 43 51 68
1498
03.01.2024 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 487,463,256.20

ஜயோதா Jayoda
திகதி 2024.01.03 வெற்றி வாரம் 1988 வர்ணம் மஞ்சள்
03 15 54 67 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,288,677.60
65841

அட கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் : 2148
சீட்டிழுப்பு திகதி : 2024.01.03
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.80,788,569.60
05 46 48 62 T
190286

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். கச்சேரிக்கு அருகில் காணி உடன் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் 3 1/2 பரப்புக் காணி, இரண்டு வெட்டுக் கிணறுகளுடன் உடன் விற்பனைக்கு உண்டு. இந்தக் காணி சுண்டுக்குழி தபால் நிலையத்துக்கு அருகில் - கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ளது. 55 மில்லியனுக்கு (5 கோடியே 50 லட்சம்) மேலான விலை எதிர்பார்க்கப்படுகிறது. (கிழமை நாட்களில் பார்வையிடலாம்)

**+447963743585(Whatsapp),021 222 7141(Srilanka)**
**E.mail : Jamesraj_uk@yahoo.co.uk** (18434)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (18465)

**076 825 7716 (ஆகாஸ்)**

## தேவை

மூவர் கொண்ட சிறிய குடும்பத்திற்கு கல்வியங்காடு, இருபாலை, கோப்பாய், கோண்டாவில் பகுதியில் வீடு வாடகைக்கு தேவை. தரகர் தேவை இல்லை. (18485)

**077 818 5978**

# மரண அறிவித்தல்

## லோகநாதன் சபேஸ்



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட லோகநாதன் சபேஸ் அவர்கள் கடந்த (30.12.2023) சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் லோகநாதன் - சாரதாதேவி தம்பதியரின் அன்புப் புதல்வனும் வசந்தராசா - மகாலட்சுமி (நாவற்குழி) தம்பதியரின் அன்பு மருமகனும் மயூரி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சதீஸ், தாட்சாயினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரஜீவன் (அவுஸ்திரேலியா) அவர்களின் அன்பு மைத்துனரும் அங்கயன், தர்ஷணன் அவர்களின் அன்பு மாமனும் மதுஷன், மதுஷா அவர்களின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கடந்த செவ்வாய் மற்றும் புதன்கிழமை 3.00pm - 4.00pm வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று வியாழக்கிழமை (04.01.2024) 12.15 pm - 1.30 pm வரை இறுதிக்கிரியைகள் இடம்பெற்று தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

Address: Crematorium Les Jon cherolles Villeraneuse
95, RUE MARCEL SAMBAT
93430 Villetaneuse

இராஜேஸ்வரன் - 33751219094
லோகநாதன்(ராசு) - 076 336 9386
மனைவி - 0033990912
ஜீவன் - 33610935361

நீர்வேலி வடக்கு.

தகவல்: குடும்பத்தினர் (18480)

# முதலாம் ஆண்டு நிறைவு நாள்

அன்னை மடியில் 28 . 04 . 1946



இறைவன் அடியில் 16 . 12 . 2022

## அமரர் திரு. இராசசிங்கம் குலசிங்கம்

**மார்கழி தேய்பிறை அட்டமி திதி 04.01.2024**

கண்முன்னே வாழ்ந்த காலம்
கண்ணிமைக்கும் நேரத்தில்
கனவாகிப் போனதே அப்பா
திங்கள் பன்னிரண்டும் கழிந்தும்
உங்கள் நினைவே நிழலாய் அமைந்துவிட்டதே அப்பா

எங்கள் சிந்தையிலும் செயலிலும்
இழைந்து நின்ற தங்கள் அன்பு
எத்தனை ஜென்மம் எடுத்தாலும்
எம்மோடு அருவமாய் நின்று வழிப்படுத்தும் அப்பா
நீங்கள் எமக்காக மீட்டிய வீணையின் நரம்புகள்
என்றென்றும் இசை பரப்பும் அப்பா
இறைதொண்டில் உங்களை அர்ப்பணித்தீர்கள்
இதுவே போதும் என்று ஆட்கொண்டாரோ உங்களை!
நீங்கள் எம்மோடு இருந்து காட்டிய அன்பை,
ஆதரவை, பாசத்தை, நிழலாக நின்று
தொடர்ந்தும் தரவேண்டுகின்றோம் அப்பா!

"இரஞ்சிதவாசா"
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

குடும்பத்தினர் (18481)

## மருத்துவராவது உங்கள் கனவா?



**STUDY MEDICINE (MBBS) IN CHINA**

சீனாவுக்கு சென்று மருத்துவம் கற்றுக்கொள்ள ஓர் அரிய வாய்ப்பு.

- இலங்கையால் (SLMC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள்.
- குறைந்த கற்கைநெறிக் கட்டணம்.
- முழுமையாக ஆங்கில மொழி மூலப் பயிற்சிகள்.

பதிவுகள் மார்ச் மற்றும் செப்டம்பர் மாதங்களில்

BYF EDUCATION (PVT) LTD.
தொடர்பு : Dr. தேவா
Mob : 076 764 6888
Tel : 011 588 2896
Whatsapp : 077 2177 995
www.byfedulk.com
byfeducation
(18438)

## நீங்கள் கடுமையாக இருமல், சளி மற்றும் இளைப்பினால் அவதிப்படுகின்றீர்களா?

**இன்றே பாவியுங்கள்**

**சித்தாரா துளசி அசமோதகம் பாணி**

ஆதிகால தேசிய ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இந்தஅற்புத பாணி நுரையீரல், சுவாச நாளங்களில் இருக்கும்சளியைப் போக்குவதுடன் இருமல், சளி, இளைப்பு, வாய்வு,அஜீரணம் போன்ற நோய்களிற்கு உடன் நிவாரணம் வழங்கும்.

**யாழ். குடா நாட்டின் அனைத்து பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.**

Manufactured By:
SITHARA SIDDHAYURVEDA PHARMACY. (C-8074)

சந்தைப்படுத்துவோர்:
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி : 021 222 2567
(குறிப்பு : சந்திரச்சந்திக்கு அண்மையில்)

## ரணிலின்...

ஜனாதிபதி இன்று முதல் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை வட மாகாணத்திற்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ள நிலையில், அவரது வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவதற்கு தடை விதிக்கக் கோரியே யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் பொலிஸார் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார்பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், தவத்திரு வேலன் சுவாமிகள், காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்க பிரதிநிதிகள் உள்ளிட்ட 8 பேருக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை பிறப்பித்திருந்த உத்தரவிற்கு அமைய, வழக்கின் 8 ஆவது பிரதிவாதியான தவத்திரு வேலன் சுவாமிகள் நீதிமன்றத்தில் நேற்று ஆஜராகி தமது நிலைப்பாட்டினை தெளிவுபடுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ம-7.33)

# VACANCY IN JAFFNA

## Maintenance Engineer / Forman

**Qualifications and Requirements:**

- NDT or equivalent in Electrical Engineering from a recognized institution
- 3 years' experience in electrical systems, electrical drawings, motor control panel,wiring and maintenance of electrical items.
- Thorough knowledge of high capacity AC motors, motor drives & other electrical controls and equipment.
- Willing to work long hours, weekends and report for duty during night time, if necessary.

**Job Responsibilities:**

- Ensure electrical equipment / machinery running without interruptions to have a smooth functioning.
- To keep all the machines in good working condition and minimize breakdowns.
- Carry out all installation, maintenance & troubleshooting of the electro-mechanical controls system.
- Repair and maintenance of the office and other electrical equipment if necessary.
- Documentation and record keeping, reporting to respective superior.

**Age:** Below 35 years

The selected candidate will be offered an attractive remuneration package. Please e-mail your CV with names and contact details of two non-related referees & passport size colour photograph (embedded to CV) on or before 10th January 2024. Please mention the post applied in the subject line of the e-mail.

Manager - HR & Administration,
SOUTH ASIAN INVESTMENT (PVT) LTD.
No. 72, Palaly Road, Thirunelveli, Jaffna
E-mail: hr@samuelgnanam.com
(18488)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.01.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org